# " தூய மெய்ப்பொருளே !"

ராகம் : இந்தோள .　　　　பாட்டு　　　　தாளம் : ஆதி

(விஜயவாரணன்)

பல்லவி

ஆதி முதல்வனே ஐங்கரனே… அருணாசல
நாதனின் சீர் மிகு நல்லருள் கொழுந்தே　　(ஆ)

அனுபல்லவி

சோதியே! சுடரே! சூழ்ந்திடும் இருள் நீக்கும்
சொர்ணமய விளக்கே! தூயமெய்ப் பொருளே　　(ஆ)

சரணம்

உ ந்தன் பெயர்நினைந்தால் ஒழிந்திடும் தடையே
உண்மை இதுஎன்றே உணர்ந்திடத் தடையேன்?
செந்தமிழ்ப் பாமாலை சேர்த்துனைப் போற்றுவேன்
தெய்வ நற்களிறே திருப்பரஞ் சோதியே　　(ஆ)

வாக்கினில் மனத்தினில் வாய்மையே வளர்ந்திட
வாழவும் பிறர்வாழ வழிமுறை செயல்வேண்டும்
நோக்கினில் நேர்மையும் நுண்ணறி வாண்மையும்
நூலறி வாற்றலும் நீயெமக் கருள்வாய்　　(ஆ)

அன்பினைத் தரவேண்டும் அன்பினைப் பெறவேண்டி
அயலவர் துன்பம் அகன்றிடப் பணிசெய்யும்
அன்பினை எந்தனுக்கு அகத்தினில் நிறைப்பாய்
அன்பர் மனத்துறையும் ஆனைமுகப் பிரபுவே (ஆ)

உ

# வாழையின் அற்புத குணம்!

ஒருவர் வாழையிலையிலே தவருமல் உணவு உண்டு வர அவருக்கு தலைமயிர் கருமையாகவே காணும் என்பது உண்மையே, ஆனால் வாழையிலையில் சாப்பிடுவோர் ஒழுக்கமாகவும் இருக்க வேண்டும் காபி, தேயிலை, பீடி சிகெரட், மற்றும் லாகிரி வஸ்துக்களை தவருமல் பயன்படுத்திக் கொண்டு 'நான் பல ஆண்டுகளாக வாழை இலையில் தானே சாப்பிடுகிறேன் என் மயிர் நரைத்து விட்டதே என்று வாழை இலை மேல் குற்றம் சொல்வது, குளிக்கபோய் சேற்றைப்பூசிக் கொள்வதுபோலத்தான்.

வாழைமரத்தின் அடிமரக்கட்டையில் செம்பைச் சொருகிவைத்தால், 6-மாற்றுக் காணும்; அதாவது செம்பு களிம்பு நீங்கும். வாழைப் பட்டையினுள் பசுமையான மூலிகைகளை வைத்துப் பலநாள் வாடாமல் பாது காக்கலாம். வாழைப் பட்டைச் சாற்றை ½ குவளை குடிக்க, சரவேகம், சமர் வேகம் என்று சொல்லும் நல்லப் பாம்புக் கடிவிஷமும் நீங்கிவிடும்! வாழைத் தண்டு மூத்திர ரோகங்கள், நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு ஆகியவைகளுக்கு அற்புத நிவாரணி. இந்த நோயுடையவர்கள் நாள்தோறும் சாப்பிட நல்ல பயன் விளையும். பூவும், பிஞ்சும் பத்திய உணவுகளுக்குச் சிறந்தவை. வாழையிலையில் 'குளோரோபில்' என்ற வஸ்து இயற்கையில் இருப்பதால் இந்த இலையில் தொடர்ந்து சாப்பிடுவோர் அனைவருக்கும் பித்த சாந்தியாகும். ஆயுள் பெருகும். தலைமயிர் நிறம் மாருது. வாழை மரம் தமிழ் நாட்டின் தலைசிறந்த அம்சம்; அதனால் தான் சுப காரியங்களில் வாழை மரத்தைக் கட்டி வைக்கிருர்கள்.

G. S. பசுபதி, B.A.L.T.
ஆசிரியர்.
ஸ்ரீ வெங்கடேஸ்வரா உயர்நிலைப்பள்ளி

# மூலிகை மணி மருத்துவ மாத இதழ்.

ஆசிரியரும் அச்சிட்டு வெளியிடுபவரும்.

ஆ. இரா. கண்ணப்பர். *R. M. P. Regd*

ஆண்டு சந்தா: ரூ 5—00 :: தனிப்பிரதி: 50 காசு

ஆறு மாத சந்தா கிடையாது.

## மார்கழி மணியில்

1. தூய மெய்ப்பொருளே! ... 1
2. வாழையின் அற்புத குணங்கள்! ... 2
3. கார்ட்டூன்! ... 4
4. 4(1)ப (தலையங்கம்) ... 5
5. மனித உறுப்புக்களில் மூலிகையின் குணாதிசயங்கள்! ... 9
6 வேலூர் சண்முகனடியார் சங்க வெள்ளிவிழா! ... 11
7. நோயும் மருந்தும்! ... 13
8. நம் நாட்டு மூலிகைகள்! ... 21
9. விஷ ஜந்துக்களும் மூலிகைகளும்! ... 29
10. இலட்சியவாதி! ... 33
11. புல்லுருவி! ... 36
12. திரும்பிப்பார்ப்போம்! ... 38
13. கொக்கிப்புழு! ... 41
14. கருவூரார் வரலாறு! ... 45
15. தலைகீழ்பரிசோதனை! ... 48
16. இதய ஒலி! ... 49
17. நவக்கோள்களின் முன்னறிக்கை! ... 51

---

போன் நெம்பர் 726 :: தபால் பெட்டி 26

அலுவலகம்: 33-1, தென்னமரம் தெரு, வேலூர். (வ. ஆ)

மூலிகைமணியில் வெளியாகும் கட்டுரைகள் பதிப்பகத்திற்கு உரியது ஆசிரியர் உரிமையின்றி யாரும் பயன்படுத்தக்கூடாது. கதையில் வரும் பெயர்கள் கற்பனையே; யாரையும் குறிப்பிடுவதல்ல.


கார்ட்டூன்-1
மதுவிலக்குவிளையாட்டு
எல்லை
ஆந்திரா
தமிழ்நாடு
டேய்! எழுந்திரு; நட ஸ்டேஷனுக்கு
கார்ட்டூன்-2
எல்லை
ஆந்திரா
தமிழ்நாடு
எங்க எல்லையில் பிடிக்க அதிகாரமில்லை
அடடா, அந்த எல்லைக்குள் போனவன் திரும்பி வரமாட்டியா?!

உ
முருகா

ஐந்து கரத்தனை யானை முகத்தனை இந்தினிளம்பிறை போலுமெயிற்றனை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தினை புந்தியில்வைத்தடி போற்றுகின்றேனே


# மூலிகை மணி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

மலர் 2) விசுவாவசு ஹூ மார்கழி-மாதம் (டிசம்பர்) (இதழ் 2


# 4 (1) J ஒழிக !

உலகத்திலே எங்குமில்லாத ஓர் அதிசயமே இது !இந்த 4(1)J என்ற சட்டம். நாம் வெள்ளையனிடமிருந்து வாங்கிய பிறகு நாமே ஓர் நன்மைக்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட விதி .ஆனால் இந்தச் சட்டம் செய்த கொடுமைகளும் கஷ்டங்களும் நம் நாட்டை எவ்வளவு தூரம் பாதித்துள்ளது என்பதை நன்கு சிந்தித்தால்தான் உணர முடியும்.மேலே குறிப்பிட்ட தலையங்கம் சிலருக்குப் புரியாமல் இருக்கலாம். மதுவிலக்கை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்திய இந்தச் சட்டங்கள் நல்ல பண்புடைய மக்கள், விவசாயிகள், ஏழைகள், நாட்டின் உற்பத்திக்கே ஒரு முதுகெலும்பாக உள்ள உழைப்பாளிகள் ஆகியவர்களை ஓட்டாண்டிகளாக ஆககிவிட்டது. ஒருவேலையும் செய்ய மனமற்ற சோம்பேறிகள், கயவாளிகள், குண்டர்கள், சமூக விரோதிகள் ஆகியவர்களை எல்லாம்

லட்சாதிபதிகளாக்கி நாட்டின் ஆளும் கட்சிக்குப் பக்கபலமாக ஆக்கி விட்டது இந்தச் சட்டம்.

இந்தச் சட்டத்தின்நோக்கம் மக்களை நல்வழியில் திருத்த வேண்டும் நாடு செல்வம் கொழிக்க வேண்டும், வளமுடையதாக்க வேண்டும், நன் மக்களாக வாழ வேண்டும் என்பதற்காகத்தான் ஏற்படுத்தப்பட்டது, என்ருலும் நடைமுறையில் அமுலுக்குக் கொண்டுவந்தபோது அதற்கு நேர் எதிரான, பாதகமான, நாட்டிற்கு ஒரு சிறிதும் நலமற்ற செய்கைகளையே உண்டு பண்ணிவிட்டதை நாம் இன்று காண்கின்ரும். இந்தச் சட்டம் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களையும், அதை விற்பனைச் செய்பவர்களை யும், வாங்கிக் குடிப்பவர்களையும் 4(1)J என்ற சட்டத்தின்கீழ் பிடித்து 3-மாதம்முதல் 6-மாதம்வரை சிறைவாசம் அதனுடன் ரூபாய் 101 வரை யில் அபராதமும் போடப்படுகிறது இதன்படி ஒருசில இடங்களில் ஏழை சனங்கள் இதைக் குடிசைத் தொழிலாகக் கொண்டு, கள்ளச்சாராயத்தை காய்ச்சி வியாபாரம் செய்து வருகின்றனர். மேல்சொன்ன சட்டப்படி இவர்களைத் தண்டித்தாலும்கூட இவர்கள் கவலைப்படுவதில்லை. தகப்பன் சிறை சென்ருல் தாய் காய்ச்சுகின்ருள்' தாயும் சிறை சென்ருல் மகன் காய்ச்சுகின்ருன். மகன் சிறை செல்லும்போது தகப்பனுக்கு விடுதலை வந்துவிடுகிறது. இப்படி சிரஞ்சீவியாக இவர்கள் "குடிசைத் தொழில்" தங்குத்தடையின்றி வளர்கின்றது! இது நிற்க,

கள்ளுக்கடைகள், சாராயக்கடைகள் இருந்தபோது அந்தக்காலத் தில் ஊருக்கு ஒரு ஒதுக்குப்புறமாக ஊர்க்கோடியில் பிறருக்குத். தொல்லை யின்றி இருந்தன. அப்போது குடிப்பவர்கள் தவிர மற்றவர்கள் அங்குச் செல்லமாட்டார்கள் . எனவே இந்தக் குடிப்பழக்கம் இல்லாதவர்களுக்கு இப்பழக்கம் தொற்றக் கூடிய சூழ்நிலை இல்லாமல் இருந்தது. ஆனால், இன்று நிலைமை மாறிவிட்டது! எவன் குடிப்பவன் ? எவன் குடிக்காத வன் ? என்று தெரிந்து கொள்ள முடியாது. ஸ்பிரிட் கடைகள் எல்லாம் "மதுக் கடைகளாக" மாறி இருக்கின்றன. பிரஞ்சு பாலிஷ் விற்கப்படும் இடமெல்லாம் மதுக்கடைகளாக மாறி இருக்கின்றன. இங்கிலீஷ் மருந்து ஷாப் என்று போர்டு போட்டுள்ள இடமெல்லாம் அசல் மதுக்கடையாக மாறி இருக்கிறது. அது மட்டுமா ? ஆயுர்வேத மருந்து உற்பத்திக் கம் பெனி என்று லைசென்சு வாங்கிக்கொண்டு அரிஷ்டங்கள் ஆசவங்கள் அதாவது புளித்தகாடிச் சரக்குகளைத் தயாரிக்கிருர்கள். இவை எல்லாம் நோயாளி சாப்பிடும் மருந்துகளா ? கிடையவே கிடையாது ! இந்த மதுக் கடைகளுக்கெல்லாம் விளம்பர போர்டுகள் மாறி இருக்கிறதேயொழிய மனிதனுக்குப் போதை தரும் வஸ்துக்களைத் தயாரித்து விற்பனைசெய்யும் நோக்கத்தைத்தான் அடிப்படையாகக் கொண்டு உள்ளன. இதுகளெல்

லாம் அரசாங்கத்தின் கண்களுக்குப் தெரியவில்லையா ? என்று கேட்டு விடாதீர்கள் !

''உற்பத்தியைப் பெருக்குங்கள். உணவை அதிகம் சேமியுங்கள்' விவசாயத்திற்கு வேண்டும் கருவிகளைத் தருகிறோம். உழுவதற்கு மாடு வாங்கித்தருகிறோம். கிணறு வெட்ட மானியம்தருகிறோம் '' என்றெல்லாம் விளம்பரங்களும் பிரசங்கங்களும் செய்து பணத்தை வாரி வாரித்தான் இறைக்கின்றது நமது அரசாங்கம். விவசாயப் பெருங்குடி மக்களும் பாட்டாளிகளும் இதைப் பயன்படுத்திக் கொண்டாலும் முன்பு இருந்த ''உற்சாகம்'' (அதாவது கள்ளுக்கடைகள் மது விலக்குக்கு முன் இருந்த உழைப்பு) விவசாயிகளுக்கு இப்போது நூற்றுக்குப் பத்துப் பங்குகூட இல்லை என்பதை திடமாகக் கூறலாம். அன்று விவசாயி மாலையில் இரண்டு மொந்தைக் கள்ளைக் குடித்து விட்டால் அதிகாலையில் இரண்டு ஏக்கர் நிலத்தை உழுது போடுவான். இன்று அவனுக்குச் சத்துள்ள இயற்கைக் கள்ளுக் கடை இல்லாததால் விடிந்த பின்பும் ஒரு சிங்கிள் டீ குடித்து விட்டு மறுபடியும் தூக்கம்போட வீட்டிற்குப் போகிறான் ! எப்படி உற்பத்தியைப் பெருக்க முடியும் ?

இந்த 4(1)ப் சட்டம் வந்து வழக்கறிஞர்கள், நேர்மையற்ற நீதிபதிகள், ஆங்கில மருந்துக் கடைகள், ஸ்பிரிட் கடைகள் கொழுத்தனவேயன்றி மற்றவர்க்கு ஒரு பயனுமில்லை. நாடு நலிவுற்றது. ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தன. இம்மது விலக்கை மற்றைய மாகாணங்கள் அவ்வளவு அக்கறையாக கவனிப்பதாகத் தெரியவில்லை. இன்னும் சொல்லப் போனால் பம்பாய், பெங்களூர், மைசூர் போன்றவை கலால் இலாகா வருமானத்தை விரும்பி வரவேற்கின்றன. அடுத்த மாகாணமான ஆந்திராவும் ''ஸ்வீட்டாடி'' என்ற பெயரில் கள்ளுக் கடையைத் திறந்துவிட்டபடியால் ஆந்திர எல்லைக்கு அருகே உள்ள தமிழன்பர்கள் சென்று மதுவைக் குடித்துவிட்டு வருகின்றனர். இதனால் ஆந்திரப் போலீசுக்கும், தமிழ் நாட்டுப் போலீசுக்கும் அதிக சச்சரவு ஏற்படுவதாக வதந்திகள்.

நாட்டுக்கு நலமற்றது - மதுவிலக்குத் தோற்றது என்று தெரிந்தும் கூட நமது அரசாங்கம் விடாப்பிடியாக வைத்துக்கொண்டிருப்பதில் ஒரு விதப் பயனும் ஏற்படப் போவதில்லை. மீண்டும் தமிழகம் செல்வம் கொழித்து தனக்குத்தானே பிரச்சாரமில்லாமல் உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டும் ஆரோக்கியமுள்ள நாடாகக் திகழ வேண்டுமானால் 4(1)ப் மது விலக்குச் சட்டத்தை ஒழித்து பழையபடியே ''கலால்'' இலாகாவை உண்டாக்கி அவசியமற்ற இலாக்காக்களை மூடிவிட வேண்டுமென்ற அரிய ஆலோசனையை ''மூலிகை மணி'' மக்கள் சார்பில் கூற முன் வருகின்றது. கவனிக்குமா? அரசாங்கம் இதனை?

எதிரிப் படைகளை முறியடிக்க, நாம்ஒற்றுமையுடன் நிற்போம் கடைசி ரத்தம் உள்ளவரை ஒரு அங்குலம் கூட விடமாட்டோம், என்ற உறுதி கொள்வோம். போராடும் நம் சிப்பாய்களுக்கு உணவளிக்க, ஊக்கமளிக்க, எல்லாவிதநலன்களையும் தியாகம் செய்வோம் தளவாடங்கள் வாங்க தங்கப்பத்திரத்தில் முதலீடு செய்து தாய் நாட்டைக்காக்க உறுதி கொள்வோமாக.

வேலூர் டாக்டர் A. R. கண்ணப்பர் அவர்களின்

## "நம் நாட்டு மூலிகைகள்"

### முதல் தொகுதி

தினமணிச்சுடரில் தொடர்ந்து வந்த அரிய உயரிய மூலிகை ஆராய்ச்சி கட்டுரைகள் விரிவாகவும் விளக்கத்தோடும் கூடியது. பக்கங்கள்தோறும் படங்கள், பண்டைய மருத்துவ ஆய்வுகள், நோய் தீர்க்கும் பயன்கள், ஒவ்வொருபக்கமும் வைத்திய களஞ்சியம். நெடு நாளைய ஆராய்ச்சியின் உழைப்பு புதையல்! அழகிய இனிய உரை நடை மொழியில் மருத்துவத்தை வாழ்வோடு இணைக்கும் பாலம் போன்ற நூல் ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டிய இயற்கைமருத்துவக் கண்ணாடி.

திருத்திய புத்தக பதிப்பு தபால் சிலவுடன் ரூ 3-10 M. O. அனுப்புவோருக்கு தபால் மூலம் கிடைக்கும்.

P. B ;26 மூலிகை மணி காரியாலயம் போன்:726

தென்னமரம் தெருவு வேலூர் (வ. ஆ.)

# மனித உறுப்புக்களில் மூலிகைகளின் குணாதிசயங்கள்!

(சென்ற மாதத்தொடர்ச்சி,)

## புழு கொல்லி பூச்சி கொல்லி

கண்ணுக்குத் தெரியும் சிறிய புழுப்பூச்சிகளையும் வயிற்றில் உள்ள பூச்சிகளையும் அழிக்கக்கூடிய பொருள்கள். வேம்பு, இலை, பூ, பட்டை வித்து, எண்ணெய், நெய்செட்டிகீரை, புன்னை விதை, பாகற்கொடி, காய் பப்பாளி, பலாசு, ஆடுதீண்டாபாளை, அவுரி, உத்தாமணி, அலரி அருவதா, அழிஞ்சில், இலுப்பை, உருத்திரசெடை, எருக்கு, அக்ரோட்டுப் பட்டை, எளியாமணக்கு, கலியாணமுருக்கு, மாமரக் கொட்டை பிட்டை உள் பருப்பு, மாவின் இலை, மாதுளையின் பட்டை, வேர்பட்டை, இலை, கொழுந்து, மாசிபத்திரி, மூக்கரட்டை, மூங்கில், வாய்விளங்கம், விஷ்ணு கிராந்தி, வெள்ளைப் பூண்டு, யானைத்திப்பிலி, காட்டுச் சீரகம், காட்டுக் கடுகு, காட்டுப் பேய்புடல், காட்டாத்தி, கழர்ச்சிக் கொடி, பாலை, கருவாகை, குடசபாலை, குமிழை குப்பைமேனி, கொட்டைகரந்தை, குந்திரிகம், நந்தியாவட்டம், செவ்வள்ளிக்கொடி, நரிக்கொன்றை, நல்வேளை, தரா, சீத்தா, செங்கொன்றை, செம்பை, கொள்ளுகாவேளை, பூனைகாலிச்சுணை, பெருங்காயம், பூவரசு, மரப்பட்டை, வேர்பட்டை, காய்- பிஞ்சு- இலை- பூ விதை, மணலிகீரை, மணிப்புங்கு, மல்லி, மலைவேம்பு-இலை-பட்டை-காய் துளசி, ஆகியன.

## பெருமலம் போக்கி.

வயிற்றைக் கலக்கி உள்ளே யுள்ள மலத்தைப் பேதியாக்கி வெளி யேற்றும் பொருள்கள்:

பேதிக் கிழங்கு, கொஞ்சிப் பட்டை,காக்கணம்கொடி-விதை-வேர் சுரை, பேய்சுரை, குப்பைமேனி, காட்டுக் கொள்ளு, வாதநாராயணன் கீரை, ஈழத்தலரி, கரியபோளம், (மூசாம்பரி) கத்தாளகட்டி, நுணா, மலை

வேம்பு-இலை-பட்டை, ரேவல்சின்னி கட்டை, பால், நேர்வாளம், கடுகு ரோகணி ஆகியன வாகும்.

## பேறுவலி உண்டாக்கி

பிரசவ வேதனையை அதிகம் உண்டாக்கி சிசுவை வெளிப்படுத்துகின்ற பொருள்:

கொடிவேலி, உத்தாமணி, குப்பைமேனி, அன்னுசிபழம், நாயுருவி கஞ்சா இலை, களா இலை, ஆகியவாகும்.

## மணமூட்டி.

வாசனை உண்டாக்கி மனத்திற்கு உற்சாகத்தை உண்டாக்கும் பொருள்கள்:-

கிச்சிலிக் கிழங்கு, சிவ கரந்தை, விஷ்ணு கரந்தை, சிறுநாகப் பூ, சந்தனம், விளா இலை-பழம், நிலக்குமிழ், தேவதாரம், கிச்சிலிப் பழம். கடற்கொஞ்சி, கடார நாரத்தை, காட்டு முள்ளங்கி, சாதிக்காய், சாதிப் பத்திரி வால் மிளகு, ஏலம் முதலியனவாகும்.

## மலம் இளக்கி

மலத்தை நீராக்கி வெளியே தள்ளும் பொருள்கள்:-

கண்டங்கத்தரி, காளான்,பரட்டை, வாதமடக்கி, சண்டிக் கீரை (லஞ்ச முண்டாக் கீரை) கம்பளிப் பூச்சிச் செடி, ஆத்துத்துமட்டி, சிற்றீச்சு பேரீச்சு

(தொடரும்

## சந்தா அன்பர்கள் கவனிக்க

சந்தாவைப்புதுப்பித்து கொள்ளும் அன்பர்கள் M-□ செய்வதில் அனேகர் தமது பழய சந்தா எண்ணை குறிப்பிடாமலே M-□ அனுப்புகிருர்கள் இதனுல் கால தாமதம் ஆகும். தயவு செய்து சந்தா எண்ணை மறவாமல் மணியாடர் கூப்பனில் குறிப்பிட்டு விலாசமும் தெளிவாக எழுதவேண்டுகிறேம்

மானேஜர், மூலிகை மணி.

உ

# வேலூர் சண்முகனடியார் சங்க வெள்ளிவிழா

வேலூர் நகரில் ஸ்ரீ சண்முகனடியார் சங்கத்தார் கடந்த நாற்பது ஆண்டுகட்கு முன்னர் ஷெ சங்கத்தைத் தொடங்கினர். 1940ல்-சங்கத்தில் கந்த சஷ்டி விழா தொடங்கப் பட்டது. தமிழ் நாட்டின் தவப்பெரியார்

**திருமுரு கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்கள்**

கடந்த 21- ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்தருளி கந்த சஷ்டி விரத மகிமையை விளக்கி மக்களை முருகப் பெருமான் பக்தியில் ஈடுபடச் செய்தார். இதனுல் சங்கத்தின் அரும்பணி வளர்ந்து மக்களிடையே சைவ சமய நெறி வளரத் தலைப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு, 25-ஆவது ஆண்டு கந்த சஷ்டியை வெள்ளி விழாவாக மிகச் சிறப்பாக 1—10—65 முதல் 8—11—65 வரையில் 40 நாட்கள் மிகச் சிறப்பாக நிகழ்ந்தன. வெள்ளி விழா மலர் வெளியிடப்பட்டது. சங்கத்தில் வந்து விரிவுரையாற்றிய 25 வித்துவான்களுக்கு வெள்ளி விழாவை முன்னிட்டுப் பட்டாடை போற்றிப் பாராட்டுப் பட்டம் வழங்கப் பட்டது. சங்கத் தலைவர் உயர்திரு. G. பாலசுந்தர முதலியார், உபதலைவர் உயர்திரு. A. S. அருணுசலம் பிள்ளை, செயலாளர் உயர்திரு R. சண்முக முதலியார்' வார வழிபாட்டன்பர் திரு P. விநாயக முதலியார் மற்றும்பல அன்பர்களும் அரும்பாடு பட்டு வெள்ளி விழாவை மிகச் சிறப்பாக நடத்தி வைத்தனர்.

## பட்டம் பெற்ற வித்துவான்கள்

1. அருள்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் — சகலகலா நிதி.
2. பவானி — மு. கண்ணப்பர் — முத்தமிழ்த் திலகம்.
3. அங்கம் பாக்கம் — ஜி. முருகேச முதலியார் — அருந்தமிழ்த்திலகம்

| | | |
|---|---|---|
| 4. காஞ்சிபுரம் | ஆ. விநாயகமுதலியார் | திருமறைபூஷணம் |
| 5. சென்னை | எம். கஜலட்சுமி அம்மையார் | சமயநெறி விளக்க மணி. |
| 6. காஞ்சிபுரம் | சுந்தர மூர்த்தி பாரதியார் | செந்தமிழ்த் திலகம். |
| 7. சென்னை | பி. எ எஸ். ராஜசேகரன் | இன்னிசைமணி. |
| 8. காவேரிப்பட்டினம் | ச. விசுவநாதன் | சொற்பொழிவுக் கொண்டல். |
| 9. ,, | ச. வெங்கடேசன் | இன்னிசைச் சுடர். |
| 10. சென்னை | எம். சண்பகவல்லி அம்மையார் | சொற்பொழவுசுடர்மணி |
| 11. காஞ்சிபுரம் | கே. புண்ணியகோட்டி | திருமுறைத்திலகம். |
| 12. சென்னை | உமாசரஸ்வதி | கலைச்செல்வி |
| 13. காஞ்சிபுரம். | சுந்தரமூர்த்தி | பைந்தமிழ்ப்பூஷணம். |
| 14. வேலூர் | குணபூஷணம் | விரிவுரை இசை விளக்கமணி. |
| 15. கடலாடி | தணிகாசல முதலியார் | புலவர்பூஷணம். |
| 16. திருமணி | வெங்கடேசமுதலியார் | நற்றமிழ்நாவலர். |
| 17. வேலூர் | ராமநாதஆச்சாரி | திருமுறைஇசைஜோதி. |
| 18. திருமணி | நாராயணசாமிமுதலியார் | பிரசங்கரத்னம். |
| 19. ஆறணி | அருட்பாதாசன் | அருளிசைவேள். |
| 20. தருமபுரம் | சுவாமிநாதன் | தமிழ்மறைஇசைக்கடல். |
| 21. சம்புவராயநல்லூர் | நடராஜப்பிள்ளை | அருள்முழக்கமணி. |
| 22. தெள்ளாரம்பட்டு | தனபால்முதலியார் | திருவருள்திலகம். |
| 23. வயலூர் | மீனுட்சிசுந்தரம்பிள்ளை | அருளுரைமணி. |
| 24. சேத்துப்பட்டு | ஸ்ரீராமுலு | வித்வசிரோமணி. |
| 25. வேலூர் | பிடில்-பாலகிருஷ்ணன் | நாதகானமணி. |
| 26. ,, | மிருதங்கம்-ராஜகோபாலன் | இசைமுழக்கமணி. |
| 27. ,, | கஞ்சிரா-புருஷோத்தமன் | இசைமணி. |
| 28. ,, | கடம்-டி. டீக்காராம் | இசைமுகில். |
| 59. அல்லிவரம் | கண்ணப்பப்பாகவதர் | முத்தமிழ்இசைத்திலகம். |
| 30. காங்கேயநல்லூர் | சோமாஸ்கந்தர் | இன்னிசைக்கலைமணி. |
| 31. வயதாமூர் | கிருஷ்ணசாமிசர்மா | பிரசங்கமணி. |
| 32. வேலூர் | வி. எம். சுப்பிரமணியமுதலியார் | கட்டடக்கலைமன்னர். |

# சந்தானேயர் திருமணம்

இராஜ பாளையம் திருP. S. நாராயணன் நாயர் திருநிறைச் செல்வி ராஜசுந்தரிக்கும் மாஹூர். திருC. K. கோபால மேனனுக்கும் (9-12-65) வியாழக்கிழமை யன்று தட்டாமங்கலம் சாந்தா சாதனில் வெகு விமரிசையாக திருமணம் நடை பெற்றது. வாழ்க மணமக்கள்!

மானேஜர் மூலிகைமணி




[ இந்தப் பகுதியில் வாசக அன்பர்கள் தங்களின் விஞக்கஊ தாராளமாக எழுதியனுப்பலாம். கூடுமான வரை பலருக்கும் பயன்தரும் கேள்விகளே முதலிடம் பெறும். ரகசிய கேள்விகஊ குறிப்பிடும் அன்பர்கள் பெயரைக் குறிப்பிடமாட்டாது. கேள்விகஊ எழுதும் போது தெளிவாகவும் முழு விலாசமும் வயதும் குறிப்பீட வேண்டும். ]

கேள்வி - கடந்த கார்த்திகை மாத மூலிகை மணியில், எண்ணெஸ்ஞனம் செய்யும் நாளில் பெண் சேர்க்கை கூடாது என்று குறிப்பிட்டீர்கள். இதஞல் ஏற்படும் கெடுதல்கஊ எழுதுமாறு எனது நண்பர்கள் கேட்டார்கள். பதில் கூறுங்கள்.

ப : ஏன், நான்தான் கேட்கிறேன் என்று எழுதிஞல் பதில் தரமாட்டோமா? எண்ணெஸ்ஞனம் செய்யும் தினத்தில் உடல் ரத்த ஓட்டம் விரைகின்றது. உடல் சூடு தணிகிறது, இது நேரத்தில் உடல் சேர்க்கையால் உலையில் வைத்த இரும்பு போல் திரேகம் கொதிக்கும், வேகமாக ஓடும் ஒரு வண்டி பாதையைத்தவறிஞல் என்னவாகும்? குளமோ! குட்டையே! மரமோ! சென்று மோதி நின்று போகுமல்லாவா? இதே போல ஸ்ஞனத்தில் தணிந்த உடம்பு நிலைதவறி உஷ்ன சீதள

...ன்னி, ஜுரம், கண்கள்சிவப்பாகி. பிதற்றல், பாடுதல் ஓடு, தல்) போன்றவை கடுமையானுல் உடல் ஐஸ் போல் குளிர்ந்து மரண வாயிலில் கொண்டு போய் நிறுத்தி விடும். எனவே இதை உங்கள் நண் பர்களுக்குக் கூறுங்கள்.

கே - எனது நண்பர் வயது 24. தொழில் குமாஸ்தா. பிராமணர் குலம். நல்ல சிகப்பு நிறமாகவும் பார்ப்பதற்கு அழகாகவுமிருப்பார் ஆனுல் அவர் மார்பகம் பெண்களுக்குள்ளது போல் பெருத்து விகாரமாக இருக்கிறது. அவர் ஆங்கில வைத்தியச் சிகிச்சை செய்துக் கொள்ள விரும்பினுர். நான் அவரைத் தடுத்து விட்டேன். இது கரைய தகுந்த ஆலோசனைகளை கூறியருளவும்.

ப - நீங்கள்கூட நண்பருக்காக உதவும் அன்பர்தானு? சரிதான்! கருஞ் செம்பையிலையை மண்சட்டியில் போட்டு விளக்கெண்ணை விட்டு வதக்கி, இளஞ்சூட்டுடன்,இரவில் இரு மார்பகத்திலும் வைத்து கட்டி வர வேண்டும். இப்படி 20 முதல் 40 நாள் விடாமல் செய்ய இயற்கையாக கறைந்துப் போகும். உத்தாமணி இலையும், முருங்கை இலையும் கூட இது போல் செய்யலாம். நண்பருக்கு உதவி செய்யுங்கள்!

கே - டாக்டர் அவர்களே! நான் 10-ம் வகுப்பு படிக்கிறேன். நான் ஒரு ஏழை. புத்தகம் வாங்கப் பணம் இல்லை. தயவுசெய்து எனக்கு உதவி. செய்யுங்கள். வி. கோபால கிருஷ்ணன். காவேரிப்பாக்கம்.

ப - பத்தாம் வகுப்புப் படிக்கும் மாணவ! உனது கோரிக்கைப் போல் பல கடிதங்கள் வருகின்றன. உண்மையில் இப்படி இருப்பவருக்குத் தான் 'மூலிகை மணி நிதி' உதவி பயன்படுகிறது. நீ படிப்பது உண்மையா? என்பது தெரிய உமது பள்ளித்தலைமை ஆசிரியர் நற்சான்றும் ஏழை என் பதற்கு நீ வசிக்குமிடம் உள்ள கிராம அதிகாரி நற்சான்றும் வாங்கி அனுப் பினுல் மூலிகை மணி நிதியிலிருந்து பணம் அனுப்பி வைக்கிறோம்.

கே - " எனக்கு வயது 45. சென்ற 32 வருஷமாக என் தொழில் ஜாப் டைப்பிஸ்டு 7 8 வருஷங்களுக்கு முன், உடம்பில் வாயு உற்பத்தியும் ஏற்பட்டு. இடுப்பு, முழங்கால், இவை சரியான முறையில் நீட்ட மடக்க முடியாமல் இருந்து இங்கிலீஷ் வைத்தியத்தில் பி. ஏ. எம் என்ற இஞ்சக்ஷன் 6 போட்டுக் கொண்டேன். 1 வருஷம் வரையில்

இந்த உபத்திரம் இல்லாமலே இருந்தது பிறகு மீண்டும் அதே வியாதி வந்து அதே. பி. ஏ. எம் ஊசி போட்டுக் கொண்டேன். குணம் ஏற்படவில்லை அதற்கு 'செப்டோமைசின்'' ''பெனிசிலின்' போன்ற ஊசிகளும் 'NOVALGIN', என்ற மாத்திரை. மற்றும் என்னவெல்லாமோ சாப்பிட்டு இங்கிலீஷ் வைத்தியம் சலித்துப் போனது அதோடு பணமும் செலவழிந்து பரமஏழையாகி விட்டேன். என்உடம்பு தேற ஏதாவது தாங்கள் யோசனை கூறுங்கள்.''

ப - பரம ஏழையாகி விட்டீரா! பாவம்! பணம் இருந்திருந்தால் பாரிசுக்கே பறந்திருப்பீரல்லவா சிகிட்சைக்கு அல்லவா? ஐயா!இந்த உடம் மண் தின்னப்போகிறது இறுதியில், நமது நாட்டின் கலாச்சாரம், பண்டைய பழக்க வழக்கங்களை மறந்தீர்! உடலுக்கு உரம் தேடுவதுடன் உயிருக்கும் உரம் தேட வேண்டும். உடம்பைக் காக்க காலமெல்லாம் இஞ்சக்ஷன், மாத்திரை, மருந்து, டானிக் என்று காலங்கழித்தவர் தெய்வம், பிரார்த்தனை, பூஜை என்று இருந்து சிறிது நாளைக்கு உமது கவலையை எல்லாம் இறைவனிடத்து முறையிடுங்கள். வாயு உபத்திரவம் நீங்க அடிக்கடி வாத நாராயணன் கீரை,சண்டிக்கீரை, முருங்கையீர்க்கு ரசம், பூண்டு சுக்கு, மிளகு, சீரகம், பெருங்காயம் ஆகியவைகளை உணவுடன் சேர்த்து வாருங்கள். ஆங்கில மருந்துகளின் வேகம் தணிய முறிவுக்கஷாயம், மூலிகை மணியில் வெளிவந்ததைப் பருகி குணமடையுங்கள்.

கே - எனக்கு வாயில் நாற்றம் அடிக்கிறது, தூங்கும் போது அதிகமாக நாற்றம் அடிக்கிறது. எனக்கு வயது 43 ஆகிறது. பல்லில் நாற்றம் அடிக்குமோ என்று பல் டாக்டரிடம் காட்ட அவர் பற்களைப் பூராவும் எடுத்துவிட வேண்டும் என்று சொல்லி, மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் (இது கவர்மெண்ட் ஆஸ்பத்திரி) பற்களை பூராவும் எடுத்துவிட்டார்கள்! பொக்கை வாய் ஆனதே தவிர. பற்களை எடுத்து ஐந்து மாதம் ஆகிறது இன்னும் என் வாய் நாற்றம் போகவில்லை. இதனால் நான் ரொம்பவும் துன்பமடைகிறேன். கோழி திருடு போன பின் குரலும் போனமாதிரி. என் பற்களையும் ஆங்கில வைத்தியத்தை நம்பி பறி கொடுத்தேன். நீங்களாவது எனது குறையைப் போக்க வழி கூறுங்கள். கு. ராஜாபிள்ளை மேலூர். M· D

ப - ஐயா! உமது சோகக்கடிதம் கண்ட எமக்கே துயரமாக இருக்கிறது. பற்களை பறிகொடுத்தும் நாற்றம் போகவில்லை யென்றால்

உமது துயரம் எத்தகையது என்பதை எடுத்துக் கூற வேண்டியதில்லை. கவலையை விடுங்கள். வாய் நாற்றம் போக கீழாநெல்லி, வசம்பு, சிவகரந்தை சுக்கு, வேம்பு ஆகியவைகளை உலர்த்தி சம அளவு இடித்து தூள் செய்து வைத்துக் கொண்டுக் காலையில் இரண்டு சிட்டிகை அளவு தேன் கொண்டு குழைத்து வெறும் வயிற்றில் உண்ணவும். ஜாதிமல்லி, விளா இலை, கிச்சிலித்தோல் இவைகளை சமமாக எடுத்து வாயிலிட்டு நன்ருகமென்று குதப்பி கீழே உமிழவும். ஓஹோ..........!! பற்களை எடுத்துவிட்டீரா— மறந்தேன். இந்த மூன்றையும் பச்சையாக இடித்து 4 குவளை தண்ணீர் விட்டு காய்ச்சி கஷாயம் வடித்துக் கொண்டு வாயிலிட்டுக் கொப்பளித்து வரவும். முருகன் அருளால் வாய் நாற்றம் ஒழியும்.

**கே - ஐயா, உங்கள் வேலூரில் இருந்து மலையாள வயித்தியம் என்று நாங்கள் கேட்காமலே, மருந்து கேட்லாக்குகள் நிறைய வருகின் றனவே. இந்த கேட்லாக் நீங்கள் அனுப்பியது தானு? இல்லை யானுல்எமது விலாசம் மற்றவர்களுக்கு எப்படித் தெரியும். கேட்லாக் மருந்துகளைப்பற்றி உமது கருத்து அறிய விரும்புகிறேன்.**

ப - ஐயா! மூலிகை மணிக்கு உழைப்பதற்கே எங்களுக்கு அவ காசமில்லை. கேட்லாக் வேறு நாங்கள் போட்டனுப்ப நேரம் எங்கே இருக் கிறது? எனவே உங்களுக்கு வரும் கேட்லாக்குகள் மூலிகை மணி சார் பில் வருவது கிடையாது. தமிழ்நாடு எங்கும் மலையாள வைத்தியம் என்று வைத்து கொண்டு கேட்லாக்குகளை போட்டு பிழைக்கும் கூட்டம் நிறைய பெருத்து விட்டது! உங்கள் விலாசம் மற்றவருக்கு எப்படி தெரியுமென் ருல் தபாலாபீசிலுள்ள தபால்காரர்களை நட்புகொண்டு ஏராளமாக வரும் கடிதங்களிலிருந்து விலாசம் வாங்கி ஆயிரக் கணக்காக அடித்து வைத்தி ருக்கும் கேட்லாக்குகளை அனுப்புவார்கள். இப்படி வந்தது தான் உமக்கும் எனவே இந்த கேட்லாக்குகளுக்கும் எங்களுக்கும் சம்மந்தமும் இல்லை **நோயாளியை நேரில் பார்த்து கை நாடியைப் பார்த்து, மருந்து கொடுப் பதே சில சமயம் குணமாவது கடினமாக இருக்கிறது என்ருல்,** கேட்லாக் மருந்தைப்பற்றி எப்படி கருத்து கூற முடியும்? ஒரு கோணி நிறைய கல் லைக் கட்டி மாங்காய் அடித்த மாதிரிதான் போங்கள்!

கே - "ஐயா, நான் ஓர் ஆசிரியை, எனது வயது 24. எனக்கு 1955. ல் டைபாயிட், நிமோனியா ஜுரம் கண்டது. இதற்கு ஆங்கில மருத்துவச் சிகிச்சையில் குணமானது. ஆனால் காது மந்தமாகியது ஆரம்பத்தில் எனக்கே தெரியாமல் இருந்தது இதை கவனிக்காமல் விட்டேன்: தற்போது காதில் ஒரு வகைப் பூச்சி சப்தம் ஏற்பட்டது. ஒரு சமயம் மழை பெய்வது போலவும், மீஷின் ஓடும் சப்தம் போலவும் ஒவ்வொரு விதமான சத்தத்தைக் கொடுக்கின்றன பலவித இங்கிலிஷ் மருந்துகள் மாத்திரைகள் எல்லாம் கொடுத்தும் பயனில்லை இப்போது மெதுவாக யாராவது பேசினால் கேட்பதில்லை. ஆசிரியர் மீட்டிங்குக்கு போகிறேனே தவிர அங்கு இன்ஸ்பெக்டர், மற்றும் உள்ளவர்கள் என்ன பேசுகிறார்கள் ஒரு வார்த்தை கூட கேட்பதில்லை. இதை நினைக்க நினைக்க வேதனையாயிருக்கிறது. உடல் சூடு நிறைய இருக்கிறது. விட்டுக்கு வந்தால் இதை நினைத்து அழுது கொண்டிருப்பது தான் என் வேலை. இதைப் போக்க ஒரு ஆலோசனையை அன்புடன் கூறுங்கள்"

ப- சகோதரி, மனதைத் திடப்படுத்திக்கொள். உன்னைவிட கேவலமான நிலையில் உள்ளவர்களுக்காக வருத்தப்படு! அவர்களுக்கு உதவி செய்வதே வேலையாகநினை! அழுவதையே வேலையாகக் கொண்டால் மரணம் சமீபத்தில் நெருங்கும். தைரியமாக இரு. அத்துடன் உள்ளத்தில் பக்தியை வேருன்றச்செய். எப்போதும் அதிகக் குளிர்ச்சியான பண்டங்களையே சாப்பிட வேண்டாம், தூதுவளை இலையை பசு வெண்ணெயுடன் காய்ச்சி நெய்யாக்கி வைத்துக் கொண்டு பகல் உணவில் நெய்யைச் சோற்றில் விட்டுச் சாப்பிடவும். இரவில் நெய்யில் இருந்து எடுத்த இலையை சாப்பிட்டுவரவும். வாரம் 1 முறை தும்பைப்பூ சிறிதளவு கஸ்தூரி மஞ்சள் துண்டு, உயர்ந்த சாம்பிராணி ஆகியவைகளை நல்லெண்ணெயில் காய்ச்சி சூடு பொறுக்கும் அளவு தலைக்குத் தேய்த்துக் குளிக்கவும். அன்று பகலில் தூங்காதே. பழனிக்கு சமீபத்தில் உள்ள நீ கிருத்திகை தவறாமல் சென்று பால் அபிஷேகம் செய்து அதே பாலைக் குடித்து விட்டு வா. மூன்றே மாதத்தில் உனது காது இரைச்சல் ஓடிப் போகும்.

கே - "என்னுடைய வயது 15. நான் ஒரு பள்ளி மாணவன் நான் பெண்களை ஏறெடுத்தும் பார்ப்பது கிடையாது தீயச்செயல்கள் செய்வதும் கிடையாது கெட்ட நண்பர்களும் எனக்கு சினேகம் இல்லை. ஒழுக்கமான வழியில் தான் இருக்கிறேன் என்று உறுதி கூறமுடியும். அப்படி இருந்தும்

**எனது சக்தி. படுக்கையில் வீணாகிறது. நான் ஒரு விடுதியில் இருந்து கொண்டு படிக்கிறேன். ஓய்ந்த நேரங்களில் 'குமுதம்' மட்டும் படிப்பேன் வாரம் 1. முறை தமிழ் திரைப்படங்களைப் பார்ப்பேன். இது தவிர வேறு புகைப்பழக்கமோ, குடிப்பழக்கமோ, கிடையாது எனவே, எனது படுக்கையில் பாழாகும் ஜீவ சக்தியை நிறுத்த ஒரு மூலிகையை சொல்லி என்னைக்காப்பாற்றுங்கள்''**

ப - தம்பி !உனக்குப் புகைப் பழக்கமோ அல்லது குடிப்பழக்கமோ ஏற்பட்டிருக்குமாயின் அதனால் மிகுந்த கவலை படவேண்டியதில்லை. ஆனால்! தமிழ்ப் படம் பார்ப்பதாகவும் இன்றும் ஏதோ ஒரு புத்தகம படிப்பதாகவும் கூறினாயே இவை இரண்டும், தான் உன் மனத்தை கெடுத்து உனது வாழ்க்கையைத் திருப்பி விட்டிருக்கிறது. "ஹூம் மற்றவர்களெல்லாம் பார்க்கிறார்களே! படிக்கிறார்களே .!.. , அவர்கள் உடம்பு நல்லாத்தானே இருக்கு "என்று கேட்டு விடாதே! உன்னுடைய உள்ளத்தின் நிலை உறுதியற்றுப்போய் பார்த்ததையும் படித்ததையும்- எண்ணி தூக்கத்தில் உன் ஜீவ சக்தி வீணாகிறது. இதற்கு எந்த மருந்தும் பயன் தருது. ஒழுக்கமானவன் 'என்று பெருமையடித்துக் கொள்வதில் பயனில்லை. பள்ளிபடிக்கும்போது திரைப்படமும் பொழுது போக்கும் புத்தகப் படிப்பும் உனக்கு அவசியமில்லை. ஓய்ந்த நேரத்தில் உனக்கு விருப்பமான இறைவனை நினைந்து வழிபடு. மாமிச உணவுகளை நீக்கி நாள்தோறும் நிறைய கீரை தினுசுகளை உணவுடன்கொண்டு மனதில் மாசு இல்லாமல் பழக, சக்தி வீணாவது தானாகவே நிற்கும் இதற்கு மருந்து அவசியமில்லை.

**கே - எனக்கு வயது 30. ஒரு வருடகாலமாக தலைமயிர் உதிர்ந்து வருகிறது. உதிர்ந்த இடத்தில் மீண்டும் மயிர் முளைக்க நல்ல உபாயம் ஒன்று கூறவும்.;**

ப - நல்ல உபாயம் வேண்டுமானால் உதிரும் தலையில் சவரக் கத்திபட வேண்டும். திடீரென்று மொட்டையடித்துக் கொள்ள வெட்கமாக இருக்கிறதா? அதனால் தான் பிரார்த்தனை என்று ஒன்று வைத்து **"சுவாமி மலைக்குச் சென்று பிரார்த்தனை செலுத்தி விட்டு வந்தேன்"** என்று சொல்வார்களே! நீங்களும் அப்படி உமது இஷ்டபட்ட இடத்துக்கு சென்று மொட்டையடித்து விட்டு வாருங்கள்! சுமார் 15 நாளைக்குள் 4 தடவை சவரக்கத்தி பட்டால் உதிர்ந்த இடமெல்லாம் மீண்டும் ரோமம்

முளைக்கும். பிறகு செம்பரத்தை பூ அல்லது மருதோன்றி இலையைப் பத மாக தேங்காய் எண்ணெயில் காய்ச்சி தடவி வர கார்காலத்து பயிர் போல முளையும் பாருங்களேன்!

கே - டாக்டர் அண்ணா அவர்கட்கு வணக்கம். எனக்கு வயது28. நடக்கிறது பெண்ணாய் பிறந்து பிரபல குடும்பத்தில் வாழ்க்கைப் பட்டேன். என் கணவர் மைசூர் ராஜ்ஜியத்தில் கெஜட் பதிவான உத்தியோகஸ்தர் ஆனால் எனக்கு எல்லா வசதி வாய்ப்பும் இருக்கிறது. திருமணம் 17 வயதில் நடந்தது அது முதல் ஒரேகுறைதான் எனக்கு. அதாவதுசிற்றின்ப உணர்ச்சியே எனது கணவருக்கு இல்லை. பிறந்த வீட்டில் செல்லமாக வளர்ந்தவள் நான். பள்ளிப் பருவத்தில் துடுக்குத்தனமும், தைரியமான மனப் போக்கும் இருந்தது. S. S. L. C. வரையும் படித்துள்ளேன். ஆரம் பத்தில் எனது கணவர் விரக தாபத்திற்கு உள்ளாக்கி உணர்ச்சியைத் தூண்டி விடுவாரே ஒழிய, அது எனக்கு அருவருப்பையும் ஆத்திரத்தை யும் கிளப்பும். சுருங்கச் சொன்னால் உடலுறவு என்பதே கிடையாது. இந்நிலையில் எத்தனை நாளைக்குச் சகிப்பேன். அங்கே எனது துடுக்குத் தனத்தை ஆரம்பித்தேன். முறைத்துப் பார்ப்பேன்! வெறிபிடித்தவள் போல் கூக்குரல் போடுவேன்! பாடுவேன்! இதைக் கண்டு மாமியார் வீட்டில் அச்சமடைந்தனர். பிரபல இங்கிலீஷ் டாக்டர் வந்து இது ஹிஸ்ட்ரீயா என்று சொல்லி தூக்கமாத்திரை கொடுத்தார் சிறிய அட்டைப் பெட்டியில் LUMINAL. என்று இருந்தது. நான் வேண்டாம் என்று மறுத்தால் கூட பலவந்தப்படுத்தி மாட்டுக்கு மருந்தூட்டுவது போல் போட்டு விடுவார்கள் இம்மருந்தை சாப்பிட சாப்பிட எனது துடுக்குத்தனமான நடிப்பு போய், செயற்கை யாகவே இஸ்ட்ரீயா வந்து விட்டது! இரண்டு வருடம் இங்கிலீஷ் வைத்தியம் தொடர்ந்தது. பிறகு மந்திரவாதியை கொண்டு வந்தார்கள் அவனும் ஏதேதோ, செய்து பார்த்தான். பிறகு நாட்டு வைத்தியம். பிறந்த வீட்டுக்கு பழிச்சொல். புத்தி மாருட்டமுள்ள பெண்ணை க்கொடுத்து ஏமாற் றினார்கள் என்று! ஆனால் இந்த மர்மம், எனது வாழ்க்கையின் ஆரம்ப கோளாறு எங்கே தெரியப் போகிறது. மாமியார் வீட்டில் உண்மையைச் சொல்ல முடியாத நிலை. நான் விளையாட்டாக ஆரம்பித்த வினை, உடலில் நோய், மனதில் தீராத கவலை, அதோடு என்னை பிறந்தகம் அனுப்பி விட் டார்கள். 3. ஆண்டுகளாக தாய் வீட்டில் தான் இருக்கிறேன் இங்கிலீஷ் மருந்துக்கு பழக்கப்பட்ட எனது உடல். அவைகள் இல்லாவிடில் இழுப்பும் மயக்கமும்,வந்து விடுகிறது இதை நிறுத்தவே முடியவில்லை.எனது ஊருக்கு தாங்கள் பொன்னேடு என விளங்கும் மூலிகை மணி வருகிறது. அதில் தங்கள் பலருக்கு தக்க விடையளித்து வருகிறீர்கள். நான் என்னுடைய ஊரும், பெயரும் எழுதவில்லை என்று வருத்தம் வேண்டாம். குடும்ப ரகசி

யத்தைக் காக்கவேண்டும் என்ற எண்ணம் உடையவள். அண்ணுவாக மதித்து தங்களுக்கு எழுதினேன். என் வாழ்வு மீண்டும் மலருமா? என்னை பிடித்த நோயும் எனது க ண வ ரு டை ய கோளாறும் நீங்க வழியுண்டா? அன்பு கூர்ந்து விடையளியுங்கள்.

ப - பேதைப் பெண்ணே; என்ன காரியம் செய்தாய். பயங்கர மான உண்மையை ஒருவருக்கும் சொல்லாமல் மறைத்து உனது குடும் பத்திற்கும் உனது உயிருக்கும் உலை வைத்துக் கொண்டாயே. படிக்காத பாமர கிராம பெண்கள்தான் போலி ஆவேசம் ஆடி கணவனை பயமுறுத் துவார்கள். படித்த பெண் நீ நேர்மையாக அறியுரையைக் கூறி உன் கணவர் உடல் கோளாறுக்கு சிகிச்சை செய்து கொள்ளச் சொல்லாமல் குடும்பத்தைக் குட்டிச்சுவராக்கி விட்டாயே, உனது கணவரும் உளவி யல் தெரியாது கெஜட்பதிவான உத்தியோகஸ்தராகி, எப்படி உன்னை புரிந்து கொள்ளாமல் விட்டார்! எல்லாம் விந்தையாக உள்ளதே, அண் ணு என்று வேறு சொந்தம் பாராட்டி கடிதம் எழுதினுய்! முருகன் திரு வருள் தான் உங்களைப் போன்ற படித்த சமுதாயத்தினருக்கு புத்தி புகட்ட வேண்டும். முதலில் நீங்கள் சாப்பிட்ட ஆங்கில மருந்துகளுக்கு முறிவு கஷாயம் விபரம் நீலி அல்லது அவுரி வேர். பச்சையாக ஒரு நெல் லிக்காய் அளவு மிளகு. அருகம்புல் சிறிதளவும் சேர்த்து மை போல் அறைத்து காலையில் வெறும் வயிற்றில் கு டி த் து பின்னர் ஆங்கில மருந்தை கண்ணெடுத்தும் பார்க்க வேண்டம்! இழுப்பு வலிகள் வந்தாலும் கவலை பபம் கொள்ளாமல் இதையே தொடர்ந்து சாப்பிட நோய் வர வர அடங்கி வரும் மனம் நிம்மதி அடைய, முருகனை வேண்டு, அகங்காரம் அழிந்து நோய் முற்றிலும் நீங்கி சுகமடைவாய். பிறகு அன்புள்ளத்துடன் மாமியார் வீடு சென்று. கணவர் உடல் நலத்தை கவனித்துக் கொள்ள சொல்லு அவர் சம்மதப்பட்டால் அவருடன் இங்கு ஒருமுறை வந்துபோ கவும். உங்கள் குறை நீங்க ஆலோசனை தரலாம்.

---

## எழுத்தாள அன்பர்களுக்கு

மூலிகை மணிக்கு கதை கட்டுரை அனுப்பும் நேயர்கள் அவற்றை திரும்பப் பெற விரும்பினுல் 10 பைசாவுக்கு குறையாமல் உரிய ஸ்டாம்பு வைத்து அனுப்ப வேண்டும். ஸ்டாம்பு வைத்து அனுப்பாத, கதை, கட்டுரைகள் திரும்பி அனுப்பப்பட மாட்டா.

# நம் நாட்டு மூலிகைகள்

வேலூர் Dr. A. R. கண்ணப்பர், R.M.P.

## "மா மரம்" (கானக்குதிரை)

**மா** மரம் தேவலோகத்து விருக்ஷங்களில் ஒன்ருகும். இந்த மா என்ற எழுத்துக்கு விளக்கம்தர அடியேனுக்கு சக்தியில்லை! பெரும்பாலும் நம் நாட்டு மூலிகைகளுக்கு பெயரிட்ட அகத்தியரே ஒரு சில மூலிகைகளுக்கு தான் 'மா' என்ற பதத்தை முன் வைத்துள்ளார். மா மரம், மாசிப்பத்திரம், மாகதி, மாதுளங்கம், மாமுனி, மாமூலி, மாவிலங்கு மற்றும் இரண்டொரு பெயருக்கு அதிகமிருக்காது. இந்த 'மா'வுக்கு அகராதியில் நூற்றுக்கும் மேலான பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது. எனினும் மகிமை வாய்ந்ததும் பெருமைக்குரிய வஸ்துக்களுக்கு தான் 'மா' பொருத்தமாகும் என்பது மஹா சன்னிதானத்தின் வாக்கு! ஆங்கிலத்தில்கூட இதற்கு 'ஒமேகா' என்பார்கள். மேலர்ன சக்தியுடையது' என்று பொருள். நம் நாட்டுத் தேன் மதுர தமிழில் 'மா'வுக்கு பொருள், லக்ஷ்மி, அன்னம் குதிரை, யானை, தேர், சக்கரவர்த்தி, நாகம் மாணிக்கம், சிம்மாசனம் ஆகியவைகளுக்கும், சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்ம தேவனையே சிறையில் வைத்து சிருஷ்டி தொழிலை நடத்தி காண்பித்து செருக்கடக்கிய மால் மருகன் ஸ்ரீ முருகப்பெருமானுக்கும் 'மா' என்று தான் ஸ்கந்த புராணம் கூறுகிறது. 'ம்' என்ற, சப்தம் பிரணவ ஒலியின் முடிவானது. இதோடும் அ என்ற அகாரம் சேரும் போது மா என விரிந்து அண்டமெல்லாம் பரவுகிறது. உயிர்களெல்லாம் அன்னை வயிற்றில் பிண்டமாகி கருவுற்றபோது 'ஓம்' என்ற வடிமாகி ஓம் என்று இறைவனை துதி செய்து கொண்டிருக்கும். ஆனல் கருப்பையிலிருந்த நழுவி பூமியில் ஜனனமெடுத்த அடுத்த வினடியே 'ம்மா! மாவ்! ம்மே!' என்று தாயை துதிக்க ஆரம்பித்து விடுகின்றன. இப்படித்தான் பெரியவர்கள்

அடிக்கடி சொல்லகேட்பதுண்டு. இவ்வண்ணம் பெருமைதாங்கிய .மா'வை தாங்கிய கானக்குதிரையை வாசகர்கள் தெரிந்து வைக்க வேண்டியது அவசியம் அல்லவா?

மா மரம் தென்னாட்டிற்கு உரியது என்பதை எடுத்துக்காட்ட வேண்டிய அவசியமில்லை. தற்காலம் ஆற்காடு வட்டம் என்று எமது தொகுதியில் ஆறு காடுகளாக இருந்தபோது, (கானக்குதிரை மாங்காடு ஒரு காடு ஆக இருந்தது என்பது வழக்கு. வேலமாநகரம் என்ற எங்கள் வேலூர் ஒரு காலத்தில் வேலங்காடாக இருந்ததாக எனது பாட்டனார் அடிக்கடி சொல்லுவார். தொன்மை வாய்ந்த பல சரித்திர வரலாறுகளைக்கண்ட எங்கள் வேலூர் உலக மாம்பழ வியாபாரத்தின் பிரதான மார்கெட் என்று சொன்னால் அது மிகையாகாது. உலக பெருந் தலைவர்கள் ருசிபார்த்து பாராட்டிய பழம் நம் நாட்டு மாம்பழமே. மாம்ரத் தில் வகைகளை குறிப்பிட நமது மூலிகை மணியில் இடம் போதாது எனவே வாசகர்கள் எங்கள் ஊர்கார்ரர்களை நேரில் சந்திக்க சமயம் நேரும்போது கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.

மாமர உபயோகம்:-மாங்கொழுந்து, இலை, பூ, பிஞ்சு, காய், பழம், கொட்டை, பட்டை, பிசின், வேர்ப்பட்டை யாவும் மருத்துவப்பயன் (காயும் பழமும் நீங்கலாக) உடையதாகும். ஒவ்வொரு அங்கத்திற்கும் ஒரு செய்கையை உடையதாயினும் பொதுவாக துவர்ப்புச் செய்கை யுடையதாகையால் நாடி நரம்புகளையும், தசை நார்களையும் சுருக்கி ரத்தம், சீழ் முதலியவற்றை நிறுத்தக் கூடிய சக்தி படைத்தது.

கொழுந்து :-மாந்துளிர் இளஞ்சிவப்பு நிறமாகவும் பட்டுப்போன்று மிருதுவாகவும் துவண்டு இருக்கும். இந்த இலைக்கொழுந்தை ஒரு பிடி யும் மாதுளங்க இலை கொழுந்து ஒரு பிடியும் சேர்த்து அரைத்து, சிறுவர் களுக்கு சுண்டக்காய் அளவும், பெரியோர்க்கு ஒரு நெல்லிக்காய் அளவும் காலை மாலை ஆக காய்ச்சிய பசும்பால் அல்லது மோர், தயிர் சேர்த்துக் கொடுத்து வர சீதபேதி, ரத்தபேதி, சீதமும் ரத்தமும் கலந்து காணும் பேதிகள்-வயிற்று கடுக்கடுப்பு இவைகள் நின்று போகும். டயாபடீஸ் என்ற (சர்க்கரை) நீரிழிவு வியாதியஸ்தருக்கு-மாந்துளிர் இலைகளை சேகரித்து எடுத்து உலர்த்தி இடித்து தூள் செய்து வைத்துக்கொண்டு தினந்தோறும் வெறும் வயிற்றில் காலையில் 1 தேக்கரண்டி 1 கப் தண்ணீ ரில் போட்டு கொதிக்கவைத்து ஆறிய பின்பு குடித்துவர சிறுநீரில் உள்ள சர்க்கரை சத்துக்கள் குறைந்துபோகும் அதிகமாக நீர் போவதும் நிற்கும்.

முற்றிய இலை:-பொதுவாக இலை உடலுக்கு உஷ்ணத்தை கொடுக்க வல்லது ஆகையால் இதை ஆடாதொடை இலைப்போலவே நான்கு இலை சட்டியில் போட்டு தேன் விட்டு வதக்கி இலை கருமையாகும் தருணம் 1

குவளை தண்ணீர் விட்டு கொதிக்க காய்ச்சி வடிகட்டி கஷாயத்தை மட்டும் தினம் இரண்டுமுறை குடிக்க சீதளத்தால் தொண்டை கட்டி பேச முடியாது குரல் கம்மியவர்கள் குடித்துவர மீண்டும் குரல் தொனியை உண்டாக்கி உஷ்ணத்தை கொடுக்கும், பச்சை இலையை நெருப்பில்போட புகை வரும் அந்த புகையை வாய்திறந்து தொண்டைக்கு காட்டினுலும் குரல் கம்மல் குணமாகும். அத்துடன் இம்முறை விக்கலுக்கும் சிறந்தது. பசுமையான மர இலையை இடித்து பிழிந்தசாரம் 1 அவுன்ஸ் பசு நெய் கால் அவுன்ஸ் பசும்பால் $\frac{1}{2}$ அவுன்ஸ் சுத்தமான தேன் $\frac{1}{2}$ அவுன்ஸ் இவைகளை ஒன்ருய் கலந்து வைத்துக் கொண்டு தினம் இருவேளை குடித்துவர மூலச்சூடு, உஷ்ணம், இரத்தமாகவே போகும் ரத்தமூலம் யாவும் குணமாகும். மா இலையால் பிரம்மஹத்திதோஷம் விலகும் என்பது சாஸ்திரோக்தம். மாவிலைத் தோரணங்கள் இல்லாத மங்கள சுப சடங்குகள் பண்டிகைகள், கொண்டாட்டங்கள் நம் நாட்டில் இருப்பது அபூர்வமல்லவா? லக்ஷ்மி வாசம் செய்யும் பொருள்களில் மா இலையும் ஒன்று "மாவிலையில் பல் துலக்காதவன் மாபாவி" என்ற பழமொழியும் உண்டு. பிரதிதினமும் பல் துலக்காவிட்டாலும் மாளய பக்ஷம் வரும்போது பெரியோர்கள் அந்த 15 நாளும் மாவிலையால் தான் பல் துலக்கி வருவார்கள். திதி, ஸ்ரார்த்தம் முதலிய வரும் தினம் மாவிலையில் பல் துலக்குவதால் தோஷங்கள் விலகி பிதுர்களின் கடாட்சமும், தெய்வ பலமும் பெருகும்- என்பது சாஸ்திரம். வாழை இலையில் சாப்பிடுவது போல் மாழை இலையைத் தைத்து அதில் அன்னம் பரிமாறி சாப்பிடுவதும் நம் நாட்டு வழக்கமாகும். இதென்ன மாழை என்று கேட்கிறீர்களா? மாழை என்பது கானக்குதிரைதான். சித்தர்கள் இப்படி எல்லாம் பெயர் வைத்து நம்மை திணர அடித்துவிட்டார்களல்லவா ?

மாம்பூ:-இலைக்கொழுந்துக்கு என்ன உபயோகமோ அதுபோல இதையும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனல் பூவை சாதாரண பேதி, நாள்பட்ட பேதிகளுக்கும் உபயோகிக்க தீரும். பூவை சேகரித்து வைத்து வேண்டும்போது நெருப்பிலிட்டு புகைக்க இந்த வாசனை சகிக்காது கொசுக்கள் ஓடிப்போகும் மற்றும் மாம்பூவை பற்றி இன்னெரு விஷயம். உலகத்தில் எந்த நாட்டிலும் பெண்கள் ஆணுக்கு நிகர் சம உரிமையுடன் வாழ்க்கை நடத்துகிருர்கள். ஆனல் நம் நாட்டில் பெண்களுக்கு சம உரிமை அளித்தாலும்கூட ஒரு விஷயத்தில் மட்டும் மிக மிக தாழ்மையும் அடக்கமும் உடையவர்கள்தாம்! அதாவது கற்புநிலை, பதி பக்தி, விசுவாசமுடையவர்களே. "தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை" என்கிறது பொதுமறை. அச்சம், மடம், நாணம், பயிற்பு என்ற நால்வகை அடக்கமும் வாய்க்கப் பெற்றவளே

பெண். இத்தகைய குணம் பெற்ற பெண்மணி சிரிப்பது வெகு அபூர்வ மல்லவா? கற்புக்கரசிகளான பெண்மணிகள் சிரிப்பொலியைக் கேட்க மாமரம் பூக்குமாம்! என்னடா மனுஷன் புளுகு மூட்டை அளக்கிருரோ? எனவும் வாசகர்களில் சிலர் நினைக்கலாம். மாம்பூ பூப்பது மாதர் தம் சிரிப் பொலியால் அசோகு பூ பூப்பது ஆண் பெண் ஊடலும் கூடலும் ஆகும்'' சாஸ்திர உண்மை. நற்பண்புகளும் நல்லபழக்க வழக்கமுடைய மக்கள் இருக்குமிடம் எல்லாம் தெய்வம் தன்மை பொருந்திய தாவரங்கள் தன் இனத்தைப் பெருக்கிக் கொள்ளும் இது இயற்கை விதி. பூத்த பிறகு தானே வித்தும் விளையும்.

பிஞ்சு, காய்கறிகள் குணம் :-பிஞ்சுக்கு மாவடு என்பார்கள். வடு மாங்காய் ஊறுக்காய்க்கு தான் பிரச்சித்தம். காய்களையும் அது போல் பக்குவப்படுத்தி உப்பு நீரில் போட்டு உலர்த்தி கடுகு நல்லெண்ணை. காரம் பெருங்காயம், தாளிதம் செய்து வெய்யிலில் வைத்து பழகிய பின் ஊருக்காயைச் சாப்பிடுவதால், பசியின்மை, வாய் நீருறல் குமட்டல், வாந்தி முதலியன தீரும். ''மாதா ஊட்டாத அன்னம் மாங்காய் ஊட்டும்.'' ஆனுல் பச்சை மாங்காயினுல் உடம்புக்கு கெடுதலே தவிர நன்மை கிடை யாது. ''தின்ருல் தினவெடுக்கும் தீபனம்போம், நெஞ்செரிவாம் அன்றே விழிநோய் அடருங்காண், துன்றிமிக வாதக்காரப்பானும் வன் கிரத்தியும், பெருகும் சூதக்கனியின் சுகம்'' என்று அகத்தியர் சொன்னபடி சொறி சிரங்கு, கண் நோய், ஆராதரணம், தாது நஷ்டம், பல் கூச்சல் உஷ்ணரோகங்கள் ஆகியவைகளை உண்டாக்கிவிடும்!

மாம்பழம் :-சூதக்கனி என்ருர் அகத்தியர். இந்த மாம்பழம் அன்புக்கு அடையாளமே தவிர தின்னக்கூடாது என்ருல் மக்கள் விடு வார்களா? பழத்தில் மருத்துவ பயன் ஒன்றுமில்லாவிட்டாலும் புராண வரலாறு கொண்டது. நாரதர் ஒரு மாங்கனியை கொண்டு எவ்வளவு பெரிய கலகத்தை உண்டு செய்துவிட்டார்! நாரதர் கலகம் நல்லதாக முடியும் என்பது போல அவர் அப்படிச் செய்து இராவிடில், சிவபெரு மானுடைய கட்டளைப்படி தென் திசைக்கு வந்த அகத்தியர், தமிழ் நாட் டில் தங்கி முருகேசனுக்கு மாணுக்கனுகி தமிழ் வளர்த்து தமிழ் நாட்டை காவிரி பாயச்செய்து வளம் செய்து இருக்க முடியாதல்லவா? போட்டியில் அண்ணனை ஜெயித்து மாங்கனி பெறவேண்டி உலகத்தை ஒருமுறை வலம் வருவதற்குள் பழம் அண்ணன் கையில் இருக்கவே கோபித்துக் கொண்டு கோவணாண்டியாய் பழநி மலைக்கு வந்து விட்டார். விநாயகர் கனியை சாப்பிட்டார்ரா? இல்லையே இன்றளவும் அவர் கையில் தானே இருக்கிறது. கோபமடைந்த தம்பியைப் பார்த்து, தம்பீ! பழம் வேறு நீ வேறு அல்லவே! என் அருகிலேயே நீ இருக்கவேண்டும் என்றல்லவா

தந்தையிடம் உன்னை (பழத்தை)ப் பெற்றுக் கொண்டேன். பழம் நீ அப்பா, 'பழநியப்பா' என்று அழைக்கிறார். ''மாங்கனிக்கு வலம் பாங்குடனே வந்த காங்கேயன் சோதரனே'' என்று பக்த கோடிகள் பாடுகிறார்கள். மாம்பழம் காலம் வந்துவிட்டால் எங்கள் ஊரே நறுமணத்தில் மிதக்கும் வெளியூரிலிருந்து வருவோர் மூக்கைத் துளைத்துபோடும்! அது மட்டுமா? ஈக்களும் மனிதர்களோடு சேர்ந்து போட்டி போட்டு ருசிக்க ஆரம்பிக்கும்போது கேட்கத்தேவையில்லை. எங்கள் ஊர் டாக்டர்களுக்கும் வைத்தியர்களுக்கும் மாம்பழ காலத்தில் சிறிது வருமானம் அதிகமென்றால் மிகையாது. மாம்பழத்தில் எண்ணற்ற ரகம் இருந்த போதிலும், மல் கோவா, காலாபாடு என்னும் ரகம் அதிக கெடுதலை தராது என்ற நம்பிக்கையால் இவ்விரு ரகங்களையும் பிரியமாக வாங்கி சாப்பிடுவார்கள் நாவுக்கு இனிமையாகவும் உடலுக்கு கெடுதலைத்தான் உண்டுபண்ணும். மா, வாழை, பலா, இம்முக்கனியும் சாப்பிட்டவர்களுக்கு முறையே மாங்கொட்டை பருப்பு, பிரண்டை தொகையல், தேன் இவைகளை முறிப்பாக சாப்பிடவேண்டும்.

மாங்கொட்டைப் பருப்பு :—பழத்தை உண்ட பின்பு கொட்டையை அனேகர் எறிந்து விடுகின்றனர். பழத்தை உண்பதால் வரும் கெடுதல்கள் அதன் கொட்டைச் சுட்டு தின்பதால் முறிந்துவிடும் மாங்கொட்டைகளைச் சேகரித்து உலர்த்தி எடுத்து காய்ந்த பின்பு உடைத்து அதனுள் இருக்கும் பருப்புகளை சிறிது நெய்விட்டு பொன் வருவலாக வருத்து இடித்து தூள் செய்து வைத்துக்கொண்டு அதிக உஷ்ணம் தரக்கூடிய பதார்த்தங்கள் சமையலுடன் சேரும்போது இதையும் சிறிதளவு சாப்பாட்டில் கொள்வதும் பண்டைய வழக்கமாகும். இதனால் சகல உஷ்ணமும் தணியும். மேலும் இந்த தூளையே ரத்தபேதி, சீதபேதி, நீரான பேதி வயிற்றுகடுப்பு, ஆசனவாய் எரிச்சல் ஆகியவைகளுக்கும் ½ தோலா எடை பால் கலந்து சாப்பிடலாம். சிறுவர்களுக்கு பாதி அளவு உபயோகிக்கலாம். இந்த தூளுடன் சுக்கு, ஓமம், கசகசா இவைகள் சமமாக எடுத்து எலுமிச்சம் பழரசத்துடன் கலந்து அரைத்து ஒரு புளியங்கொட்டை அளவு நெய்யோடு கலந்து கொடுக்க மூலச்சூடு, மலத்தில் கிருமி விழுதல், கிராணி வயிற்று கோளாறுகள் யாவும் தீரும். மாங்கொட்டை பருப்பு மூல ரோகங்களுக்கு மிகச் சிறந்தது. ஆகையால், சித்த வைத்திய முறையில் கருணைக்கிழங்கு லேகியத்தில் உபசரக்காக பயன் படுத்தி கொள்வார்கள்.

மா மரப்பட்டை :-தேரையர் என்ற சித்தர் மூலிகைகளுக்கு பரிபாஷை வைப்பதில் மஹா நிபுணர். தனது குருவிடம் ஊமையாகி வாய் திறவாமல் பல கலைகளையும் கற்றுணர்ந்து பின்பு, தனது குருநாதன் ஒரு நோயாளியின் தலை மண்டையை பிளந்து மூளையில் தங்கியிருந்த சிறு தேரையை எடுக்க முயற்சித்தபோது சமயோசித புத்தி கூர்மையால்

அந்த தேரையை தானுகவே வெளிவரச் செய்தவர். இந்த நிகழ்ச்சியால் ''சபாஷ்'' தேரையாரே! என்ற பெயர் பெற்றவர்! இவர் பாட்டை கவனியுங்கள்.

''ஆனைக் கன்றில்-ஒரு பிடியும் மரையன் விரோதி இளம் பிஞ்சும்
கானக்குதிரை புறந்தோலும் காலிற்பொடியை மாற்றினதும்
தாயைக்கொன்முன் சாறிட்டு தயவாறைத்து கொள்வீரேல்
மானைப் பொருந்தும் விழியாளே! வடுகும் தமிழும் குணமாமே.''

எல்லாம் பரிபாஷைகளே! சில சமயம் வைத்தியர்களே குழம்பி விடுவார்கள்! ஆனைக்கன்று-அத்திப்பிஞ்சு, மரையன் விரோதி-கோவைப் பிஞ்சு, கானக்குதிரை புறந்தோல்-மா மரப்பட்டை, காலிற்பொடி செருப் படை என்ற மூலிகை இவைகளை ஒரு சமமாக எடுத்து தாயைக் கொன்ருன் சாறு வாழைப்பூ சாறுவிட்டு மைபோல அறைத்து ஒரு நெல்லிக்காயளவு சாப்பிட்டால், மான் விழியொத்த பெண்ணே, வயிற்று கடுத்து போகும் சகலரத்த சீதபேதிகளும் (வடுகும் தமிழும்) குணமாகும் என்பது கருத்து. மாம்பட்டைக் கஷாயம், மாம்பட்டை, அரசம்பட்டை, நெல்லிப்பட்டை, நாவல்பட்டை இதை வகைக்கு ஒரு பலம் எடுத்து சுத்தம் செய்து 1 படி தண்ணீர்விட்டு காய்ச்சி $\frac{1}{8}$ படியாக சுண்டவைத்த கஷாயத்தை வேளை 1க்கு 2 முடக்கு வீதம் கொடுத்துவர தேரையர் பரிபாஷையில் குறிப்பிட்ட வைகள் தீரும். சிறுவர்களுக்கு பாதி சர்மரோகமுடையவர்கள், மேக ரோகம், பிரமீய ஒழுக்கு, பூச்சி விஷம் அதனுல் நமைச்சல் சொறி முதலிய வைகளுக்கு மாம்பட்டை 1 வீசை நுணுப்பட்டை $\frac{1}{4}$ வீசை அதிமதுரம் 1 பலம் நிலப்பணகிழங்கு 1 பலம் ஆகியவைகளை நறுக்கிப்போட்டு 4 படி தண்ணீர்விட்டு 1 படியாக சுண்ட காய்ச்சி வடித்த கஷாயத்துடன் 1 படி நல்லெண்ணை விட்டு கலந்து சிறுதீயாக எரித்து சாறு சுண்டியபின் பத மாக காய்ச்சி இறக்கி ஆறியபின் பத்திரப்படுத்திக் கொண்டு வாரம் இரு முறை ஸ்னானம் செய்துவர மேல் குறிப்பிட்டவை நீங்கும்.

மா மர வேர் பட்டையில் கஷாயம் செய்து குடிக்க-அதிமூத்திர வியாதியுடையவர்களுக்கு தாகம் அடங்கும், உடல் உஷ்ணம் தணியும், அதிசார பேதி நிற்கும்.

மாம் பிசின்:-கால், பாதங்களில் உண்டாகும் பித்த வெடிப்புகளில் தடவினுல் வெடிப்புகள் மறைந்து ரணங்கள் மாறும். சர்ம ரோகங்கள் சொறி சிரங்குகளுக்கும், மாம் பிசின் உடன் எலுமிச்சம் பழம் ரசம் சேர்த்து கலந்து அவைகளுக்கு மேலுக்கு பூசுவதால் குணம் ஏற்படும்.

இவ்வளவு மகிமை வாய்ந்த கானக்குதிரை புராண வரலாற்றிலும் நிறைய இடம் பெற்றுள்ளது. பார்வதியம்மையார் பூலோகத்தில் பல தடவை ஜனித்து சிவபெருமானை வழிபட்டதாக புராண வரலாறு. காஞ்சி

புரத்தில் 1008 சிவாலயங்களும் 108 விஷ்ணு ஆலயங்களும் இருந்ததாக காஞ்சி ஸ்தல புராணம் கூறுகிறது. இன்னும் காஞ்சி ஏகாம்பர ஈஸ்வரர் கோயிலில் ஒரு பிரமாண்டமான மா மரமும் அதனடியில் ஏகாம்பரநாதர் லிங்க வடிவமாகி இருப்பதை காணலாம். இந்த மா மரத்தடியில் காமாக்ஷி யம்மையாக அவதரித்து மணலால் சிவலிங்க பிரதிஷ்டை செய்து வழி

## "ஆசிரியர் குறிப்பு."

நம் நாட்டு மூலிகைகள் என்ற தலைப்பு ஏற்கெனவே பல ஆண்டுகளாக தினமணி சுடரில் வாரம் 1 முறை வெளிவந்தது தமிழக வாசக அன்பர்களுக்கெல்லாம் தெரிந்த விஷயமே. அனேகமாக கண்களில் அடிக்கடி தென்படும் எங்கும் கணக்கூடிய மூலிகைகளை வாரந்தோறும் காண்பீர்கள். தற்போது முருகப் பெருமானுடைய இன்னருளாள் பல பெரியோர்களின் ஆசியாலும் வாசக அன்பர்களாலும், மூலிகைகளுக்கென்றே! மூலிகை மணி தொடங்கப்பெற்று ஓராண்டு முடிந்து இரண்டாவது ஆண்டு துவங்கி விட்டது. பல்லாயிரக்கணககான வாசக அன்பர்களின் வேண்டுகோளுக்கு இனங்க, நமது சொந்தப் பத்திரிகையிலேயே நம் நாட்டு மூலிகைகள் புதிய தொடர் வரிசைக் கட்டுரைகள் வெளியாகும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுவதுடன் இதுகாறும் தமிழகத்தின் தலைசிறந்த தமிழ் நாளிதழ் தினமணியில் எமது கட்டுரைகளுக்கு இடமளித்து மக்களுக்கு பல நல்ல மருத்துவக் கருத்துக்களை வெளியிட்ட தினமணி ஸ்தாபனத்தாருக்கும் தமிழக மக்கள் சார்பில் அடியேனின் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்த இதழில்

## "காக்கணம் கொடி"

என்ற மூலிகை வெளியாகும்.

பட்டு முக்தியடைந்ததாக புராண வரலாறு. காஞ்சிபுரத்தில் வருடா வருடம் 'மாவடிசேவை' உற்சவம் இன்னும் நடைபெறுகிறது. காமாக்ஷியம்மை மாமரத்தினடியில் சேவை செய்து முக்தி பெற்ற வரலாறு தான் அந்த உற்சவம் அந்த மா மரமும் அழியாமல் இருக்கிறது. இந்த மாவடி ஈஸ்வரனை காண்போருக்கெல்லாம், சகல பாபங்களும் ரோகங்களும் வில்கும் என்பதில் ஐயமுண்டோ? பவ ரோகவைத்தியநாதன் அல்லவா இறைவன்.

மா மரம் முக்தியைத் தரக்கூடியது என்ருல் ஒரு சிலருக்கு சந்தேகம் வரலாம். முக்தியை மட்டுமல்ல பிறவி என்ற பெருங்கடலை நீந்த கூடியது மாமரம். அசுரர்களில் மிக்க வல்லமையுடையவனும் தேவர் மூவர்யாவராலும் வெல்ல முடியாத சக்தியை படைத்த சூரபன்மன் ஸ்ரீ முருகப்பெருமானிடம் போரிட்டு பல மாயாஜாலங்கள் புரிந்து விரக்தியடைந்து கடைசியில் மாமரமாகி நின்று விட்டான். இப்படி மாமரமாகி நின்ற அசுரனை எந்தையாம் முருகவேள் என்ன செய்தார் தெரியுமா? தன் கை வேலாயுதத்தால் மாமரத்தை பிளந்து ஒரு பாதியை மயில் வாகனமாகவும், மற்ற பாதியை சேவல் கொடியாகவும் வைத்துக்கொண்டார்! மாமரம் முக்தியை கொடுத்து விட்டது அசுரனுக்கு, அது மட்டுமா? முருக பக்தர்கள் மயில்வாகனு சேவல் கொடியோனே! என்றெல்லாம் பக்த கோடிகள் புகழ்ந்து பாடுவது மாமரத்தால் அடைந்த முக்தியல்லவா? வாசகர்களே இப்போது சொல்லுங்கள் கானக்குதிரையைக் காணவும் தகும் அல்லவா? (முற்றும்.)

---

## மூலிகை மணி நிதி நன் கொடை

| | | |
|---|---|---|
| கடந்த மாதம் வரவு | ரூ. | 47 82 |
| உயர் திரு வெ. ந. திருநாவுக்கரசன் வேலம்பாளையம். | | 10 00 |
| எம். எம் அர்தநாரி பிள்ளை கன்னடிபாளையம் | | 10 00 |
| எச். ஜெஸ்வந்தராஜ். சிதம்பரம் | | 5 00 |
| ஜி. நடராஜன் திருச்சி, 2 | | 2 00 |
| பி. நஞ்சப்பன் மதுக்கரை | | 1 00 |
| டி. என், தர்மலிங்கம் தெலுங்குபாளையம் | | 1 00 |
| வி. தேவராஜி நாயுடு. மதுக்கரை | | 0 88 |
| டி. எஸ். கலியாண சுந்தரம், சென்னை. 33. | | 1 00 |
| ஆக. மொத்தம் வரவு...ரூ. | | 78 70 |

நீங்கள் அனுப்பும் நன்கொடை பல நற்காரியங்களுக்கு பயன் படுகின்றன. என்பதை நன்றியுடன் அறிவிக்கிருேம்

மூலிகை மணிக்கு நிதி நன்கொடைக்கு தாராளமாக வழங்குங்கள்!




(சென்ற மாதத் தொடர்ச்சி.)

## ஓணான் கடி.

பொதுவாக ஓணான் மனிதர்களை தேடி வந்து கடிப்பதில்லை. எதிர் பாராதவிதமாக கடிப்பின் கடித்த இடத்தில் சந்திரன் பிறைபோல ஒரு வெட்டு காயம் (குறி) காணும். இதனால் வலி, குத்தல், நமைச்சல், வீக்கம் ஆயாசம் போன்றவைகள் ஏற்படும். ஓணான் எந்த நிறமாக இருந்ததோ அந்த நிறமாக பேதி ஆகும். ஓணான் கடி விஷம் நீங்க ஒரு கால் ஆழாக்கு இளம் மூங்கில் குருத்து சாறு எடுத்து அதில் கெட்டி மிளகு கால் பலம் தூள் செய்து கலந்து காலை மாலை இரண்டு வேளை ஒரு தேக்கரண்டி வீதம் ஐந்து நாள் கொடுக்க விஷம் இறங்கும்.

### பச்சை ஓணான் (அ) பச்சோந்தி கடிவிடம்

பச்சை ஓணான் கடிக்க அந்த இடம் வீங்கி தடிக்கும் இந்த விஷத்தின் குணம் எடுத்துரைக்க வேண்டுமானால் ஓணான் கடி விடத்திற்கு சமமாக இருக்கும்.

பச்சோந்தி கடித்திடினே — தழு தாழை
பண்ணை பரட்டை யிலை நண்ணும் சிறுநீர்
மிச்சமாய் விட்ரைத்துக் — கடிவாயில்
மெல்ல பூசி யாத்திலைத் தெள்ளு பொடியை
வெண்ணை தனிலிட்டு காச்சி — நாசியினில்
விடுத்து வீக்கத்திற்றிட விட குணமாகும்.''

(சித்தர் ஆரூடம்.)

பச்சை ஓணான் கடிக்கு பறட்டைகீரை, பண்ணை கீரை, தழுதாளை சமமாக எடுத்து பருவம் அடையாத பாலகர் சிறுநீர் அதிகமாக விட்டு அறைத்து கடித்த இடத்தில் தடவி வரலாம் அல்லது ஆத்தி இலையை பொடியாய் இடித்து தெள்ளிப் பசு வெண்ணெயில் போட்டு காய்ச்சிய நெய்யை மூக்கு துவாரத்தில் நசியம் இட்டும், கடிவிடத்திலும் தடித்த இடத்தில் தடவிவர விஷம் இறங்கும்.

## தவளைக்கடி

தவளையில் நாட்டு தவளை, காட்டு தவளை, சொறி தவளை என மூன்று வகைப்படும். இவை மூன்றுக்கும் மூன்றுவித குணம் உண்டு. சொறி தவளை கடித்த இடமெல்லாம் சொறி தினவு உண்டாகும். உடம்பு கருத்து வேர்குரு போன்று உடலில் ஊரல் உண்டாகும். காட்டு தவளை இந்த தவளை கடிக்கின் சொறியும் போது ரணமாகி நீர் கசியும். நாட்டு தவளை பொதுவாக வாய்க்கால் வரப்புகளில் குளம் குட்டைகளில் சாதாரண மாக காணப்படும். இது கடிக்கில் உடம்பில் ஆங்காங்கு கருப்பு நிறம் முடைய வேர்குரு போன்ற சொறிகள் கண்டு உடம்பெல்லாம் பரவும். இதனால் உபாதை இல்லாவிட்டாலும் மேனி அழகு கெடும்.

## நாட்டு தவளைக்கடிக்கு சிகிச்சை

அகத்தியிலை சாறு கால் படி, அடுப்பு கறிதூள் 2 பலம் கூட்டி கலக்கி ஒரு முடக்கு வீதம் காலை மாலை குடித்து புகை கறி உப்பு இவை இரண்டையும் பருத்தி இலை சாற்றில் அறைத்து மேலுக்கு பூசிவர நீங்கும்.

## சொறி தவளைக்கு

(1) நீலி (அ) அவுரி, (2) வேலி (அ) சித்தரமூலம் (3) மலைத் தாங்கி, (4) வெள்ளை காக்கணம் கொடி, (5) வீழி, (6) ஆதொண்டை, (7) பாலை இந்த மூலிகைகளின் வேர்களை சமமாக எடுத்து உலர்த்தி இடித்து தூள் செய்து வைத்துக்கொண்டு மேற்படி தூளை திரிகடி வீதம் வென்னீரில் கலந்து உண்ண விடம் நீங்கி உடல் அழகு பெறும், உப்பு, புளி ஆகாது.

## வெள்ளை விழுதல்

வெண் குன்றிப் பருப்பும் புளிய விரைத்தோலும் வகைக்கு வராகனெடை (க) வீதம் மைபோற் பொடித்து எருமை வெண்ணெ யிற் குழைத்துண்ணவும்; இந்தப்படி 9 தடவை கொள்ளத் தீரும்.

## காட்டு தவளைக்கு

அகத்தி இலை இடித்து பிழிந்த சாற்றை கால்படி, கால் பலம் மிளகு தூள் இடித்து இரண்டையும் கலக்கி காலை மாலை ஒரு தேக்கரண்டி வீதம் உண்டு, புகை கறியும், உப்பும், பருத்தி சாற்றில் அறைத்து மேலுக்கு பூசிவர கடிவிடம் நீங்கும்.

## ஈக்கள்

ஈக்களுக்கும் கடிவிடம் உண்டு. இதில் பொதுவாக வீட்டு ஈக்கள் தொற்று நோய் பரவ செய்கின்றன. மற்ற ஈக்கள், கார் ஈ, பேர் ஈ, மாட்டு ஈ, காட்டு ஈ, நாய் ஈ என பலவகை உண்டு. காட்டு ஈக்கு கடித்தால், தடிப்பும், எரிச்சலும் உண்டாகும். காட்டு ஈ கடி அதி தூக்கத்தையும் மூர்ச்சையும் உண்டாக்கும்.

## சிகிச்சை முறை

வீட்டு ஈக்கள் பரவாமல் தடுக்க உணவு பண்டங்கள் பலகாரங்களை அவ்வப்போது மூடி வைததும், அவ்வப்போது வீட்டை துப்புறவு செய்து சுத்தமாக வைத்துக்கொள்வதும். ஈக்கள் சேரவிடாமல் இருக்க வழியாகும். மற்ற ஈக்கள் எதிர்பாராதவிதமாக கடிப்பின் குப்பைமேனியை அறைத்து உடம்பெலாம் பூசிக்கொண்டு அரைமணி கழித்து குளித்தால், நமச்சலும், தடிப்பும் தீரும். காட்டு ஈ கடி விஷம் நீங்க வேண்டுமானுல் அப்ரக பஸ்பத்தை தேனில் குழைத்து அதனுடன் நாலு துளி குப்பை மேனி சாற்றை கலந்து காலை மாலை ஐந்து நாள் கொடுக்க காட்டு ஈ கடி விஷம் தீரும்.

(தேறையர் யமுக வெண்பா உறை விளக்கம்)

(தொடரும்)

உ

ஸ்ரீ ராஜ பூஜித மகான்

**ஸ்ரீகுழந்தையானந்த சுவாமிகள் திவ்ய சரிதம்.**

ஸ்ரீ K. S. V. ரமணி அவர்கள் எழுதிய

புத்தகம் விலை: ரூபாய் 2—00

கிடைக்குமிடம்: தபால் சிலவு தனி.

ஸ்ரீ குழந்தையானந்த சுவாமிகள் சத்சங்கம்

357, பைகிராப்ட்ஸ் ரோட், சென்னை-14.

# ஆசிரியர் அறிக்கை!

* மூலிகை மணி ஒரு மருத்துவ மாதசஞ்சிகை. பண்டைய தமிழ் மருத்துவத்தில் ஊறித்திளைத்து ஆழ்ந்த அனுபவத்தின் அரிய உயரிய படைப்பைக் காட்டும் பத்திரிகை

* தமிழ் தெரிந்த ஒவ்வொரு குடும்பமும் சந்தாதாரராகச் சேர்ந்து தங்கள் வாழ்வின் வழிகாட்டியாகக் கொள்ளவேண்டியது சிறப்பு ஒவ்வொரு தமிழ் மாதமும் வெளிவரும் ஒப்பற்ற வைத்தியக் களஞ்கியத்தின் தனி இதழ் விலை 0—50. (60-காசு அனுப்பினல் தபாலில் கிடைக்கும்) ஆண்டுச்சந்தா ரூ. 5/- (அரையாண்டு சந்தா கிடையாது மூவாண்டுச் சந்தா சேர்ந்தால் ''நம் நாட்டு மூலிகைகள்'' முதல் பாகம், இலவசம். 'மூலிகை மணி' அச்சகத்திலிருந்து நூல் பலவெளியிடுவது எங்கள் குறிக்கோள், திட்டப்படி, 'தினமணி' சுடரில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்துவந்த ''நம் நாட்டு மூலிகைகள்'' என்னும் கட்டுரைத் தொகுப்பை இன்னும் விளக்கமாக மூன்று பகுதிகளாக வெளியிடுவோம். ஒவ்வொரு பகுதியும் ரூ. 3 (அடக்க விலைப்பதிப்பு) ஆகும். தபால் செலவு தனி, அடுத்து பல வெளியீடுகளைப்பற்றி மூலிகைமணியில் வெளிவரும்.

* சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்போது தங்கள் சந்தா எண்களை மறவாமல் குறிப்பிடவேண்டும். உடனுக்குடன் ஆவன செய்ய நன்குயிருக்கும்.

* வாசகர்கள் தங்கள் நோய்பற்றி எழுதினல் ''நோயும் மருந்தும்'' பகுதியில் விடைவரும். கேள்வி கேட்பவர்கள் அந்தத் தபாலின்மீது நோயும் மருந்தும் என்று குறிப்பிட வேண்டும்.

* எழுத்தாளர்களுக்கு :-நமது பத்திரிகையில் சித்த மருத்துவ ஆராய்ச்சி நோய்களைத் தீர்க்கும் அனுபவக் கட்டுரைகள், உடலியல் ஆய்வின் சிந்தனைத் தெளிவுகளுக்கே முதல் இடம், மற்றகதை கவிதை கட்கு மூன்றுமிடமே என்பதைக் கருத்திலுணர்த்து அனுப்புக. வெளியிடப்படும் கட்டுரை உரிமை அனைத்தும் மூலிகை மணிக்கே.

* ஏஜண்டுகளுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் மூலிகைமணி இதழ் வெளிவதற்கு முன் தங்கள் முன் மாதத்திய பாக்கியை அனுப்பினல்தான் புதிய பத்திரிகை அனுப்பப்படும். அதிக பத்திரிகை தேவையானல் 10 நாட்களுக்கு முன்பே, முன்பணம் அனுப்பித் தங்கள் தேவையைக் குறிக்கவேண்டும். விற்பனைத்தொகை வருவது தாமதப்பட்டால், இதழ் அனுப்பப்பட மாட்டாது.

உ
முருகா.

# இலட்சியவாதி

மு. பெருமாள்

(சென்ற மாதத்தொடர்ச்சி,)

மற்ருெரு மாணவன்: ஐயா எனக்கு பல் சொத்தை அடிக்கடி வலிக்கின்றது. என்ன செய்யலாம்.

இன்ஞெரு மாணவன் எழுந்து குறுக்கிட்டு ஐயா: இவன் எப்போதும் பப்பர்மிட் பல்லில் கடித்து உண்கின்ருன். நாவினுல் சுவைத்துச் சாப்பிடுவதில்லை. பல்லில் கடித்து கடித்து விழுகின்ருன். இதுமட்டுமில்லை கமர்கட், எப்பொழுதும் கடித்துச் சாப்பிடுகிருன். இப்போதுகூட அவன் மடியில் கமர்கட்டுள்ளது. சமையல் அறையில் நூழையும் போதெல்லாம் சர்க்கரையைத்திருடி வந்து வாயிலிட்டு நறநறெனக் கடித்து விழுங்குகிருன்.

தம்பி, நீ உட்கார், அடேய் அரங்கநாதா இங்கே வா பார்க்கலாம் என்ருர் இலட்சியவாதி. அருகில் வந்தான். அவன் மடியிலிருந்த கமர்கட்டுகள், பப்ரமிட்டுகள் கீழே விழுந்தன, சரி இவைகளை எடுத்து இங்குவை உன் பற்களைத் திறந்து காட்டுக. வாய் நாற்றம், பற்களில் பாசி படர்ந்து சொத்தையுமாக இருந்தன.

அரங்கா நீ இன்று முதல் இனிப்புப் பண்டங்களை உண்பதைக் குறைத்துக் கொள்க. இளமையிலேயே உன்பல் கெட்டு விட்டதே வருங்காலத்தில் பற்களால் வேதனை படுவாயே! கூடியவரையில் இனிப்புப்பட்சணங்களை பல்லினுல் கடித்து உண்ணுதே. கடிக்க வேண்டிய இனிப்புப் பட்சணமாயின் அறவே விலக்கி விடுக இனிப்புக்கும் பற்களுக்கும் ஒத்துவராது. ஒவ்வொரு முறை உண்ணும் போதெல்லாம் பற்களை நன்ருக நீரினுல் கொப்பளித்துச் சுத்தம் செய்க, இடுக்குகளில் எவைகளையும் தங்கவிடாதே. ஆல்,வேல் குச்சிகளால் பல் தேய்க்க நோய் நீங்க கரிசலாங்கண்ணியால் பற்களை தேய்க்க முற்படுக. இனிப்பு உப்பு பசைகளால், அல்லது பொடிகளால் பற்களை தேய்க்காதே அழுக்கு சேரவிடாமல் அனுதினமும் சுத்தம் செய்து வருக. இம்

முறைகளை நீ கையாண்டால் வயோதிகம் வரையில் பற்களால் துன்பமின்றி வாழ்வாய்,

ஐயா தங்களின் ஆணைப்படியே நடந்து என் பற்களைப் பாதுகாத்துக் கொள்கின்றேன், என் போன்றவர்கள் இளமையிலேயே தங்கள் பற்களைக்குறித்து எச்சரிக்கையாக நடந்து நலம் பெறுவது நல்லது. குறிப்பாக இனிப்பு பண்டங்களைக் கடித்து உண்பதை அறவே விடுவது மிகமிக அவசியமாகும்.

இச்சமயம் பிரார்த்தனை மணி ஒலித்தது.

எல்லா மாணவர்களும் பிரார்த்தனை புத்தகத்துடன் பிரார்த்தனை மண்டபத்தை நாடி மௌனமாக தலை குனிந்தவண்ணம் விரைந்தனர். பிரார்த்தனைக்குச் செல்லுகையில் ஒருவரோடு ஒருவரும் பேசக்கூடாது. பிரார்த்தனை முடிந்து திரும்பும் வரையில் மௌனத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்பது ஆசிரம நியதி. அதுசமயம் ஒரு மாணவனது பெற்றோர் ஊரிலிருந்து வந்தனர். அவர்களை கையில் ஜாடை காட்டி இருக்கவைத்து விட்டுச்சென்றான். பிரார்த்தனைக்குப் போகும்போது மௌனம் கையாள்வதில் பெருங் கண்டிப்பு ஆசிரமத்தில்.

இலட்சியவாதி பிரார்த்தனையைத் தலைமைதாங்கி நடத்தினர். எல்லோரும் ஏகோபித்து தணிந்த குரலில் இனிமையாகப் பாட முற்பட்டனர்.

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழ
பான்மை தரு செய்ய தமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்று விழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிற் பாம்.

திருவடி யுந்தண்டை யுஞ்சிலம் புஞ்சிலம் பூடுருவப்
பொருவடி வேலுங் கடம்புந் தடம்புயம் ஆறிரண்டும்
மருவடி வான வதனங்க ளாறும் மலர்க்கண்களும்
குருவடி வாய்வந்தென் னுள்ளங் குளிரக் குதிகொண்டவே.

கருவாய்க் கிடந்துன் கழலேநினை யுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப்புலியூ ரானே.

வெறுப்பனவே செய்யுமென் சிறுமையைநின் பெருமையினாற்
பொறுப்பவனே யராப் பூண்பவனே பொங்கு கங்கை சடைச்
செறுப்பவனே நின் திருவருளாலென் பிறவியை வேர்
அறுப்பவனே யுடையா யடியேனுன் னடைக்கலமே.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றனேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

இங்ஙனம் பாடல் முடிந்ததும் ஐந்து நிமிடம் அனைவரும் மௌனத் தியானம் புரிந்தனர். இறுதியில் இலட்சியவாதி மாணவர்கட்கு பின் வரும் இன்னுரைகள் இயம்பினர். இறைவனை நாம் ஏன் வணங்க வேண்டும்? என்பதை விளக்கு கின்றேன். கேட்டுக் கருத்தில் நிறுத்துவீர்களாக,

செய்யாமல் செய்த உதவிக்கு வையமும்
வானகமும் ஆற்றல் அரிது.

என்னும் நந்தமிழ் மறை நல்லுரைப்படி ஆண்டவன் நமக்குச் செய்துள்ள உதவி ஒப்பற்றதாகும். நம்மால் அவருக்கு ஒரு நன்மையில்லை. அவரோ கைமாறு ஒன்றுங் கருதாமல் அளவில்லாது செய்துள்ளார். செய்து கொண்டுள்ளார். ஒரு பஸ்ஸில் நாம் ஏறுகின்றோம். நிற்கவும் இடமில்லை. அதுசமயம் அங்கு உட்கார்ந்திருந்த ஒருவர் ஐயா இங்கு உட்கார்ந்து கொள்ளுங்கள் என எழுந்து நம்மை உட்கார உதவினர். உதவியோ சிறியது தான். ஆயின் அவ்வுதவி நம் உள்ளத்தையே உருக்கி அவரிடம் அளவில்லாத அன்பு உண்டாகி விடுகிறது. அவருக்கு நாம் என்ன வகையில் நன்றி செய்வது என நாம் துடிக்கின்றோமன்றோ! அவரைக் காணும போதெல்லாம், நினைக்கும் போதெல்லாம் அன்புருக்கமாக நன்றி செலுத்துகின்றோம்.

ஆயின் எல்லாம் வல்ல இறைவன் நமக்கு செய்யும் உதவி ஆக உயர்வானதாகும். ஈடில்லாத இன்னருளாகும். நாம் அவருக்கு நன்றி நவில்வதுதான் பிரார்த்தனை வழிபாடாகும். ஆடையால் அணிபவர்க்கு அழகேயல்லாது அதற்கு ஒரு பயனுமில்லை. மற்றவர்களை மகிழ்விப்பதுதான் அதன் செயல். இஃதே போன்று இறைவன் நம்மிடமிருந்து ஒரு பயனும் பெறவில்லை. இத்துணை மகத்தான கருணை நிறைந்த இறைவனை நாம் காலையும் மாலையும் தோத்திரம் புரிந்து வழிபட வேண்டியது நம் நன்றிக்குரிய நற்கடமையாகும். ஆகவே அவரது ஒப்பற்ற ஆற்றலை விளக்கும் பக்திப்பாடல்களை ஓதி மன ஆறுதலைப்பெறுவது அவசியம். ஏனெனின் "உடன் பிறந்தே கொல்லும் வியாதி" என்பதற்கொப்ப நம்மிடமுள்ள மனமே மிகவும் ஆபத்தானது. நம்மை அமைதியில்லாமல் அலையவைப்பதில் நம்மனம் மிகவும் ஊக்கமுள்ளது. (தொடரும்)




(சென்ற மாதத் தொடர்ச்சி.)

## அரசமர புல்லுருவி.

அரச மரத்தின் குணாதிசயங்களை பற்றி முன்பொருமுறை தினமணி சுடரில் எழுதியது பல வாசக அன்பர்களுக்கு நினைவு இருக்கலாம். அப்படி அரசமரத்திற்கே மகத்தான சக்தி இருக்கும்போது அந்த மரத்தின் சாரத்தையே உரிஞ்சி வளரும் இந்த அரசமர புல்லுருவிக்கு எவ்வளவு சக்தி இருக்கின்றது என்பதை எடுத்து இயம்பவேண்டுமோ! சகலரும் தன்னை பாராட்டி புகழவேண்டும் என்று நினைப்போர். இந்த புல்லுருவியை சூரியகிரணம் (அ) சந்திரகிரணம் நேரத்தில் சுத்தமாக குளித்து மஞ்சள் நூலால் அதற்கு காப்பு கட்டி தூப தீப நெய்வேத்யங்கள் காட்டி பக்தியுடன் எடுத்துவைத்துக்கொண்டு அதில் சிறிதளவு கோரஜனை சேர்த்து சந்தன கல்லில் வைத்து உயர்ந்த சந்தன கட்டையால் அரைத்துவரும் சந்தனத்தை நாள்தோறும் ஒரு மண்டலம் திலகமிட்டுவர ராஜவசியமாகும்.

அசுவனி நட்சத்திரம் அரசமரப் புல்லுருவி எடுத்து அரைத்து ஒரு சுண்டைக்காய் அளவு பாலில் கலந்து குடித்துவரவேண்டும் இப்படி ஆறுதடவை சாப்பிட்டுவர ஒரு குதிரையின் பலத்தைப் பெறலாம். இந்த புல்லுருவியை நல்ல நேரத்தில் எடுத்து வீட்டில் கட்டினால் நித்திய ஐசுவரியம் உண்டாகும்.

## ஆலமரப் புல்லுருவி

ஆலமரப் புல்லுருவியை மகம், அசுவனி, பூசம் நட்சத்திரங்களில் தசமி, திதி கூடிய ஞாயிற்றுகிழமைகளில் நீராடி தூப தீப நெய் வேத்யங் களை காட்டி, தேவி மந்திரத்தை ஆயிரத்தெட்டு தடவை ஜெபித்து கன்னி நூலால் காப்பு கட்டி எடுத்து வலது கையில் கட்டிக்கொள்ள பிறர் கண்ணுக்கு தெரியமாட்டார்கள். பொதுவாக ஞாயிற்றுகிழமை ஆல மரப் புல்லுருவியை எடுத்து பாலில் கரைத்து சாப்பிட சகல வசியமாகும் இந்த புல்லுருயை அதிகம் எடுத்து உலர்த்தி அதை எரித்து அதன் சாம்பலை எடுத்து விபூதியில் கலந்து நெற்றியில் அணிந்துவர தெய்வானு கூலம் உண்டாகி சகல பாவங்களும் நீங்கும். ஆலின் புல்லுருவியை மிருகசீரிஷம் நக்ஷத்திரத்தில் எடுத்து வலது கையில் கட்டிகொள்ள சர்வ ஜன ஆகர்ஷணம் உண்டாகும். ரேவதி நட்சத்திரத்தில் இந்த புல் லுருவியை புற்று தேன் விட்டு அறைத்து கண்டரோகங்களுக்கு போட நீங்கிவிடும். தசமி, திதி, ரேவதி ஞாயிறு கூடிய தினங்களில் இதை சுத்த மாக எடுத்து வலது கையில்கட்ட யானை பலத்தை பெறலாம்.

## மலடி பிள்ளை பேறு அடைய

அரசமரத்தின் புல்லுருவியை ஆச்சாரத்துடன் ரேவதி பஞ்சமி, திதி கூடிய சுபதினத்தில் எடுத்து உடம்பில் அலங்காரம் செய்து கொள்ள. மலட்டுதனம் உடைய பெண்களுக்கு புத்திர சந்தானம் உண்டாகும்.

---

"ஒருவன் அதிகாலையில் விழித்தெழுந்து காலைக்கடனை நிறைவேற்றியப்பின், இஞ்சிரசம் எடுத்து அதில் தேன் கலந்து இருபது நாட்களுக்கு, தொடர்ந்து அருந்தி வந்தால் ஆரோக்கியமும் இரத்த விருத்தியும் உண் டாவதோடு மயக்கம், பித்தம், போன்ற நோய்கள் மறையும் அற்புதத்தைக் காண்பீர்கள்"

**இம்மாம் கஜ்ஜாலி.**

# திரும்பிப்பார்ப்போம்

புலவர் வெங்கடேசன், நெல்லிகுப்பம்.

1. பண்டையநம் தமிழகத்தில் வாழ்ந்த மக்கள்
பலர்நல்ல பண்புற்று நெஞ்சந் தன்னில்
கொண்டிருந்தார் நல்லமைதி! பகற்போ தெல்லாம்
குன்றுமல் உழைத்திரவில் ஓய்வு கொண்டார்.
கண்டபடி தேவைகளைப் பெருக்கிக் கொண்டு
காசின்றிக் கருத்தழிந்து கலங்கல் இன்றி
உண்டியையும் அளவறிந்துண் டுவப்பினேடே
ஒழுக்கத்தை உயிரைவிட ஓம்பி வாழ்ந்தார்!

2. ஆதலினல் அவரையெலாம் நோய்கள் வந்தே
அணுகற்கும் அஞ்சினகாண்! அன்றும் சில்லோர்
பாதகத்தீச் செயலாலோ உணவை ஆய்ந்து
பசிகொண்டே அளவறிந்துண் ணுமையாலோ
வேதனைகள் மிகச் செய்யும் நோய்கள் கொண்டு
வெந்துமிகத் துடித்துள்ளார்! அதனைக் கண்ட
தீதற்ற சித்தரெல்லாம் சிந்தை நொந்து
சிறந்த பல மூலிகையை ஆய்ந்து கண்டே

3. கொடுத்துள்ளார்! ஒளியின்முன் இருளைப் போலக்
கொடுநோய்கள் பறந்தன! அச்சித்தர் எல்லாம்
அடுத்துவரும் மக்களினை நோய்தொ டர்ந்தால்
அவரெல்லாம் அதுபோக்க, இயற்கை யன்னை
கொடுத்தபல மூலிகையை நன்ருய் ஆய்ந்து
குணங்களையும் செய்முறையும் குறித்து நூலாய்
எடுத்தளித்துச் சென்ருர்கள் அவர்கள் போன்ற
ஏற்றமிகு பெருவள்ளல் யாரும் இல்லை.

4. காவியத்தால் சிற்பத்தால் இசையால் பேச்சால்
கண்ணிமைக்கா வீரத்தால் கண்ணை ஈர்க்கும்
ஓவியத்தால் உயர்விண்ணில் பரந்த மண்ணில்
உறுபொருளைக் காணுவதால் இன்ன வற்ருல்

ஆவியைத்தான் உடலுக்குள் நிறுத்தல் ஆமோ ?
அருட்சித்தர் ஆய்ந்துகண்ட மூலி கைத்தான்
மேவியநல் லுடல்காக்கும்; உயிரைக் காக்கும்!
மெஞ்ஞானச் சித்தரினும் மேலோ ருண்டோ?

5. கற்றவர்கள் பலர்சித்தர் நூலைக் கற்றுக்
கடுநோயின் கொடுமைகளைக் கழித்து வாழ்ந்தார்!
மற்றவரும் அவர்சொல்லைக் கேட்டுக் கேட்டு
மறவாமல் மூலிகையின் பயனை யுண்டார்!
அற்றைநாள் தற்போதிங் கிருத்தல் போல
அளவற்ற மருத்துவர்கள் இல்லை இல்லை
இற்றைக்கு' முப்பதாண் டுக்கும் முன்னே
இருந்தவர்கள் மூலிகையால் யாவும் செய்தார்!

6. ஒருநரம்பில் மூன்றுவிரல் வைத்தே நந்தம்
உடல்நிலையை துல்லியமாய் உணருகின்ற
அருங்கலையைச் சித்தரன்றி யாரே கண்டார்?
அழிநோயை நாடியதன் முதலை நாடி
வருத்தாமல் அதுபோக்கும் வழியை நாடி
வருவாயைப் பெரிதாக மதித்தி டாமல்
பொருந்தியநன் மருந்தாலே அதனைப் போக்கும்
புலம்பெற்ற சித்தர்களைப் போல்வா ருண்டோ ?

7. பலவற்றில் நந்தம்பண் பாட்டை விட்டே
பறங்கியரின் பண்பாட்டை ஏற்றுற் போல
நலஞ்செய்யும் சித்தர்வழி மருத்து வத்தை
நாம்மறந்தே அவர்வழியை நாடி விட்டோம்!
மலங்கொண்டு பூமணத்தை மறந்த தாலே
மனங்கெட்டோம் மாயாமல் உடலைத் தின்னும்
பலநோயால் பலமிழந்து பணமி ழந்து
பலபாடு படுகின்றோம் அந்தோ! அந்தோ!

8. இன்றெங்கும் மேனாட்டு மருத்து வந்தான்
எப்படியோ பரவுகின்ற ததனால் மக்கள்
அன்றிருந்த சித்தர்முறை மருத்து வத்தை
அடியோடு மறந்துசிறு நோய்வந் தாலும்
நன்றதிகம் செய்யாவ மருத்து வத்தை
நாடிப்போய்க் கேட்கின்ற பணத்தைக் கொட்டி
அன்றுசிறி தளவுமகிழ் வெய்து கின்றார்
அதுகண்டு நோயுள்ளே சிரிக்கு தந்தோ!

9. மேலைமுறை மருத்துவத்தில் நோயைக் காண
மிகவெளிய வழியில்லை மருத்துவர்கள்
நாலைந்து மாதங்கள் முயன்றிட் டாலும்
நறுக்காக நோய்காண முடிந்தி டாமல்
காலைநடுப் பகல்மாலை கொத்துக் கொத்தாய்க்
கணக்கின்றி மாத்திரைகள் தருவதோடு
மூலையிலே தேளிருந்து கொட்டல் போல
முகஞ்சுளிக்க ஊசியினைக் குத்து கின்றார்!

10. அறுக்கின்றார்; குடைகின்றார்; பிடுங்கு கின்றார்.
அழுத்துகின்றார்; தட்டுகின்றார் அந்தோ! நோயைப்
பொறுத்தலுடன் இவர்செயலைப் பொறுத்துக் கொண்டு
புழுங்குகின்ற நோயாளி, தரும்ம ருந்தை
வெறுக்காமல் உண்டாலும் நோயி னின்று
விடுதலைதான் கிடைக்குமென்ப துறுதி யில்லை.
அறுக்கின்ற நோயோடு பிறிதோர் நோய்வந்
தமையாமல் இருந்தாலே அதுவே போதும்.

11. இன்றுள்ள மேலைமுறை மருத்து வர்க்கு
யாருக்கும் மருந்துசெய்யும் ஆற்றல் இல்லை
தன்றிருவை எண்ணுகின்ற தரத்தோர் செய்து
தருகின்ற மருந்துகளை வாங்கி வைத்துக்
குன்றுகின்ற நோயனுக்குக் கொடுக்கின் றார்கள்!
குன்றமெனச் செல்வத்தைக் குவிக்கின் றார்கள்!
கன்றுகின்ற அவனுடைய நோய்கள் தம்மைக்
கருணையொடு கடவுள்தான் போக்கல் வேண்டும்.

12. பெரும்பொருளைச் செலவிட்டுப் பயன்கா ணாமல்
பேதுற்றுத் திரிகின்ற உலகத் தோரே!
அருளோடு பெருஞ்சித்தர் ஆய்ந்து தந்த
அரியபல மூலிகையை நாடிப் பெற்றுப்
பெருநோய்கள் போக்கிடுவோம் உடலைக் காப்போம்
பேரின்பங் கொண்டிடுவோம்! இன்றே சற்றும்
மருளாமல் நம்முடைய முன்னோர் சென்ற
மாபெரிய நல்வழியைத் திரும்பிப் பார்ப்போம்.

# கொக்கிப் புழு

(க.க.)

நாற்ப்புழு வென்றும் நாக்குப் பூச்சியென்றும் உருண்டைப் புழு என்றும் பெயர் பெறும். நீமட்டோடா என்னும் எளிய அமைப்புள்ள பெரிய புழுக்கூட்டம் ஒன்று உண்டு. இப்புழுக்களுள் பல நீரிலும் நிலத்திலும் சுதந்திரமான வாழ்க்கை நடத்துகின்றன. பல பயிர் பச்சைகளுக்குக் கேடு செய்யும் ஒட்டுண்ணிகள் பல பிராணிகளுக்குக் கேடு விளைவிக்கின்றன. முதுகெலும்பிகளிலேயே ஒவ்வொன்றின் உடலிலும் நூற்புழு இனம் ஒன்றோ சிலவோ குடிபுகுந்தே இருக்கின்றன. மனிதவுடலில் ஏறக்குறைய ஐம்பது இனங்கள் உண்டு. அவற்றில் பத்து பன்னிரண்டு மிகச் சாதாரணமாகப் பரவியுள்ளவை. இவற்றுள் சில மானிட இனத்திற்கே பெருந் தீங்கு செய்யும் நோய்களை விளைவிக்கும் முதன்மை வாய்ந்தவை. நூற் புழுக்கலெல்லாம் மனிதனையும் அவன் வளர்க்கும் கால்நடை முதலிய விலங்குகளையும் பற்றிக் கொண்டு அவனுக்கு நலக்கேட்டையும் பொருட் கேட்டையும் தருபவை கொக்கிப் புழுக்களும் அவற்றுக்கு நெருங்கிய இனங்களும் ஆகும்

மனிதனைத் தொற்றும் புழுக்களிளெல்லாம் அவன் கருத்தை அத்துணைக் கவர்ந்ததும் அவன் ஆராய்ச்சியை அத்துணைத் தூண்டியதும், கொக்கிப் புழுவைப்போல மற்றொரு புழு இனி இல்லை. இதற்குக் காரணம் மானிட வர்க்கம் முழுவதையுமே இந்தப் புழுவைப்போல வேறெந்தப் புழுவும் பாதிப்பதில்லை.

மரணத்தை நேர் முகமாகவோ மறைமுகமாகவோ உலகெங்கணும் விளைவிப்பதிலும் மனிதனுடைய ஆற்றலைக் குன்றுவிப்பதிலும் அவனுக்குத் துன்பத்தை மிகுவிப்பதிலும் ஒரு வேளை மலேரியா ஒன்றே, கொக்கிப் புழுவை விஞ்சலாம். வேறொன்றும் இதற்கு இணையாகாது. வேறு சில நோய்களைப்போல இது ஆடம்பரமாகத் தோன்றுவதே இல்லை. கண்ணுக்குத் தெரியாமல் பரவும் கள்ளநோய் ஆண்டாண்டாகத் தலைமுறை தலைமுறையாக உயிர்ச்சக்தியை உறிஞ்சி, உடல் நலத்தைக் கீழறுத்துத் திறமையை போக்கி, மானிட இனங்களையே

சீர்கெடச் செய்து வந்திருக்கிறது. சில பருவங்கள் செல்வதற்குள்ளே ஆரோக்கியமாக இருந்த குடும்பம் வெளுத்து நோஞ்சலாகப் போகும், உழைப்பும் ஊக்கமும்மிக்கிருந்தது மடியும். மனத்தளர்வும் உள்ளதாக மாறும். முதலில் கூரிய அறிவினுல் பொலிவுடன் விளங்கும் குழந்தைகள் மந்தமாகவும் அசடராகவும் ஆவர். பள்ளிகூடங்களில் தேர்ச்சியுருமல் பின்தங்கி படிப்பு ஏறவில்லையென்று விட்டுவிடுவர். உண்மையை அறியும்போது இவர்கள் மெய்யாலும் மனத்தாலும் குன்றிப்போனமைக்குக் காரணம் இவர்கள் குடலிலே குடிகொண்டு இவர்கள் இரத்தத்தை உறிஞ்சியும் வழிந்தோடச் செய்தும் இவர்களை ஒடுக்கி அழிக்கும் உட்பகையாகிய கொக்கிப்புழு என்று தெரியும்.

கொக்கிப்புழுவானது வரலாற்றுக் காலத்து முதலே மனிதனைப் பற்றி வந்திருக்கிறது. கி. மு. 1,500 ஆண்டுகளுக்கு முற்பட்ட எகிப்திய பாப்பிரஸ் சுவடியிலே இரத்த சோகை விளைவிக்கும் நோயைப்பற்றிச் சொல்லியிருக்கும் குறிப்பிலிருந்து அது கொக்கிப் புழுவைப்பற்றியதே என்று செம்மையாகத் தெரிகிறது. இப்புழு தன் வாயிலுள்ள கொக்கிப் போன்ற கைட்டின் (CHITIN) என்னும் கொம்புப் பொருளாலன பற்களால் மனிதன் குடலிலும் சில பாலூட்டிகள் குடலிலும் உட்சுவரைக் கடித்துக் கொண்டு இருப்பதால் இது கொக்கிப் புழு எனப்பெயர் பெற்றது.

கொக்கிப் புழுவில் சில சாதிகளும் சில இனங்களும் உண்டு. அவை மனிதன், நாய், பூனை, பயிருண்ணி விலங்குகள் முதலிய பலவகையான பாலூட்டிகளில் தொற்றும். மனிதனுடைய உடலில் தொற்றும் கொக்கிப் புழுவில் இரண்டு இனங்கள் மிக சாதாரணமானவை. ஒன்று ஆங்க்கிலோஸ்ட்டோமா டுயோடினேல் என்பது. மற்றொன்று நிக்கேட்டார் அமெரிக்கானஸ் என்பது. இவை இரண்டும் பொதுத் தோற்றத்திலும், வாழ்க்கை வட்டத்தின் அம்சங்களில் பெரும்பாலனவற்றிலும் பழக்கங்களிலும் மிகவும் ஒத்திருக்கும். எனினும் இவ்விரண்டிலும் ஆங்க்கிலோஸ்ட்டோமாவால் விளையும் தீங்கு கொடுமை மிக்கது. அந்தப் புழுவைப் பூச்சி மருந்துகளால் அகற்றுவதிலும் தொல்லை அதிகம்.

---

## மூலக்கழிச்சலுக்கு.

ஒரு தலை வெள்ளைப்பூண்டும், கஞ்சாவிதையும் ஓர் நிறையாய் வெதுப்பி நல்லெண்ணையும் கொஞ்சம் தென்னங் கருப்பு கட்டியுஞ் சேர்த்து லேகியம் போலரைத்து எலுமிச்சங்காய் பிரமாணம் மூன்று நாட் காலையிற் கொள்ளத் தீரும்.

கொக்கிப் புழுக்கள் எல்லாம் சற்றுத் தடிப்பானவை. சாதாரணமாக அரையங்குல நீளமிருக்கும். ஆங்க்கிலோஸ்ட்டோமா முக்கியமாக உலகின் வட பகுதிக்கு உரியது. ஐரோப்பா, வட ஆப்ரிக்கா, மேற்கு ஆசியா, வட சீனு ஆகிய இடங்களில் மிகுதியாக இருப்பது. ஆனுல் இந்த தொற்றுள்ள மனிதன் சென்றுள்ள உலகின் எல்லாப் பாகங்களுக்கும் இது அவனைத் தொடர்ந்து போயிருக்கிறது. இது நிக்கோடாரைவிடப் பெரியது; முரடானது. பெண் புழு 12 மில்லி மீட்டரும் ஆண் 9 மில்லி மீட்டரும் இருக்கும். ஆணின் பின் முனையில் குடைபோன்ற அகன்ற பை ஒன்றுண்டு. நிக்கேட்டார் அமெரிக்கானு முக்கியமாக அயனமண்டலத்தில் உள்ளது. எனினும் இப்பொழுது உலகின் பல பாகங்களிலும் மிகுதியாகப் பரவியிருக்கிறது. இது அமெரிக்காவில் முதலில் கண்டு பிடிக்கப்பட்டதால் அமெரிக்கன் கொக்கிப்புழு எனப்படுகிறது. எனினும் இது ஆப்பிரிக்காவிற்குரியதாகலாம்.

கொக்கிப்புழு ஏராளமான எண்ணில் முன் சிறு குடலின் கடைசி பகுதியிலும் அதற்கடுத்த இலியம் ஜெஜூனம் என்னும் நடுக்குடற் பகுதிகளிலும் இருக்கும். இது குடலின் உட்சுவர்களிலுள்ள சிறுதமனிகளைக் கவ்விக்கொண்டு இரத்தம் உறைந்து போகாதபடி தோய்வைத் தடுக்கும் ஆண்டி கோவா குலின்கள் (ANTICOAGULINS) என்னும் ரசாயனப் பொருள்களைக் கடிவாயில் செலுத்தும். இதனுல் இரத்தம் தடையின்றி வந்து கொண்டு இருக்கும். புழு வேருேர் இடத்தைப் பற்றிக்கொண்டு போன பிறகும் இரத்தம் புண்ணிலிருந்து ஒழுகிக் கொண்டே இருக்கும். அப்படிப் பல புண்களிலிருந்து இரத்தம் சொரிந்து கொண்டு இருக்கும். சாதாரணமாக ஒரு புழு மனிதவுடலில் புகுந்து ஐந்து வாரங்களில் முட்டையிடத் தொடங்கும். ஒரு நாளைக்கு ஒரு புழு 25,000/35,000 முட்டையிடும். இப்படி நாள்தோறும் இட்டுக்கொண்டிருக்கும். பல புழுக்கள் 5, 6 மாதம் உயிரோடிருக்கும். எனினும் மற்றும் பல 5, 6 ஆண்டுகள் உயிருடனிருக்கும். 16 ஆண்டுகள் உயிருடனிந்த புழுக்களும் உண்டு!

---

## சந்தா நேயர் திருமணம்.

கோபி செட்டிபாளையம் திரு. சுப்பிரமணியம் திருநிறைசெல்வி கார்த்திகேயனிக்கும். மதுகரை திரு. கே. சுப்பிரமணியம் அவர்களது மகன் திருநிறைசெல்வன் குழந்தைவேலுக்கும் (29-11-65) திங்கட்கிழமையன்று கோபிசெட்டிபாளையம் சீதா கல்யாண மண்டபத்தில் திருமணம் விமரிசையாய் நடந்தேறியது.

ஒரு தடவை பூச்சி மருந்து கொடுத்தபோது ஒருவர் குடலிருந்து 5,000 புழுக்கள் வெளி வந்தன. இதனுல் இப்புழுக்கள் எவ்வளவு அதிகமாகச் சிலருடைய குடலில் இருக்கின்றன என்று அறிந்துக்கொள்ள லாம்.

கொக்கிப்புழு லார்வா நிலையில் மனிதனை தொற்றுகிறது. அந்த லார்வா ஈரமும் வெப்பமும் உள்ள மண்ணில் வாழ்வது. ஆதலால் அந்தத் தொற்று நிலை லார்வா வாழ்வதற்கேற்ற சூழ்நிலையுள்ள அயன, உப அயன நாடுகளிலெல்லாம் இது எளிதாகப் பரவும். சுகாதார நிய கங்களைக் கவனியாமல் வயலிலும் வரப்பிலும் ஆற்றங்கரையிலும் குளக் கரையிலும் மலங்கழித்தல், குளங்குட்டைகளிலேயே இறங்கிக் காலலம்பு தல் ஆகிய அசுத்த செயல்களை மக்கள் விடாத இடங்களிலெல்லாம் இந்த லார்வா நன்ருகத் தழைக்குமாதலால் அவ்விதப் பிரதேசங்களிலே நூற் றுக்குத் தொண்ணூறிலும் அதிகமான மக்களிலே இப்புழு இருக்கின்றது. உலகிலுள்ள இருநூறுகோடி மக்களிலே நாற்பத்தைந்து கோடி மக்களிடம் இது பரவியிருக்கிறது. இந்தியா, தென் கிழக்கு ஆஸ்திரேலியா, தென் அமெரிக்கா, ஐக்கிய நாடுகளின் தென் பகுதி, மத்தியதரைக் கடலையடுத்த ஐரோப்பா, எகிப்து, மத்திய ஆப்பிரிக்கா, தென் ஆப்ரிக்கா ஆகிய இடங் களிலெல்லாம் இது உண்டு. குளிர் நாடுகளிலும் ஈரமும் வெப்பமுமான மண்ணுள்ள சுரங்கங்களில் வந்துவிடலாம். ஜெர்மனி, கார்ன்வால் முதலிய பகுதிகளில் மக்கள் சுகாதார முறைகளைக் கையாள்வதற்கு முன்பு இன் நோய் சாதாரணமாக இருந்து வந்தது.

(தொடரும்)

## ரத்தபித்தம், குன்மரோகம்.

குமட்டிக்காய் எலுமிச்சம்பழம், வெள்ளுள்ளி, நொச்சி, இஞ்சி, இவைகளின் சாறு வகைக்கு ஒருபடி வீதம். ஒன்ருகக் கலந்து காய்ச்சி ஒருபடியாக வற்றவைத்துக் கல்வத்திட்டு, சூதலிங்கம், பெருங்காயம் இந்துப்பு, ஓமம், வெங்காயம், கடுகு, மஞ்சள், வெந்தியம், மிளகு, சாந் தம் நேர்வளம் வகைக்கு கழஞ்சு வீதம் பொடித்துப் போட்டு மெழுகு போல அரைத்துச் சிமிழில் வைத்துக் கொண்டு வேளையொன்றிற்குத் தூதுளங்காய் பிரமாணத்தை வெல்லத்திற்பொழிந்து பத்து நாட்கள் உட்கொள்ள உதரரோகங்கள், குன்மம், வாயு ஆகியவைகள் குண மாகும்.

# "கருவூரார் வரலாறு"

— கருவை சித்தன்.

கரூர் என்ற கருவூர் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள சரித்திரப் பிரசித்திபெற்ற ஊர். கருவூரிலுள்ள பசுபதீஸ்வரர் ஆலயம் பழம் பெருமை வாய்ந்தது.

பசுபதீஸ்வரர்கோவிலின் தென் மேற்கு மூலையில் வெளிப் பிரகாரத்தில்ஒரு சிறிய கூடம் உள்ளது. அது தான் கருவூரார்கோவில்—கருவூரார் சமாதியான இடம்.

கோவில் வெளிப்பிரகாரத்தைச் சுற்றி வரும் பக்தர்கள் தவருமல் கருவூரார் கோவிலைச் சுற்றி வரத் தவறுவதில்லை. இப்படி புகழ் பெற்ற கருவூரார் வரலாறு அனைவரும் தெரிந்துக் கொள்ள வேண்டியதே!

கருவூரில் விஸ்வபிராமணகுலத்தில் தேவதத்தன் மகன் மயன் என்ற ஒருவன் இருந்தான்! அவன் கரூரில் நல்ல பெயரோடும் புகழோடும் தொழில் செய்து வந்தான். அவன் என்னதான் பெயரோடும் புகழோடும் இருந்தாலும் அவனுக்கு பெருங் குறை ஒன்று இருந்தது. அது தான் பிள்ளையில்லாக் குறை! அந்தக் குறையை தீர்த்துவைக்க ஆண்டவனை வேண்டினன். ஆண்டவன் கண் விழித்தார்.

கொஞ்ச நாட்களுக்குப்பின் மயனுடைய வீட்டில் குழந்தையின் குரல் கேட்டது! ஆண் குழந்தை! அந்தக் குழந்தைதான் பிற்காலத்தில் கருவூரார் எனப் புகழபட்டவர்.

கருவூரார் குழந்தையிலிருந்தே, சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்து வந்தார். பெற்றவர்களும், மற்றவர்களும் போற்ற, சகல கலைகளிலும் வல்லவனுனன்.

தன்னுடைய குலத்தொழிலில் கருவூரார் தன்னிகரற்று விளங்கினர். கருவூரார் வரலாறுபற்றி எழுதப்பட்டுள்ள ஏட்டில் அவரைப் பற்றி தேவலோகத்திலுள்ள தேவதச்சன்கூட இவருக்கு நிகராகான் என புகழப்படுகிறர்.

கருவூரார் சித்தர்கள் எழுதி வைத்திருந்த நூல்களைக் கற்று, ஆராய்ந்தார், அதன் தன்மை மேன்மைகளை அறிந்து, காய கற்ப முறையைக் கற்றர். அதன்படி காயகல்பம் செய்து சாப்பிட்டு சித்தி பெற்றர். நீண்ட நாட்கள் வாழும் வழி அறிந்து வாழ்ந்தார்.

பிணி, மூப்பு முதலியவைகளை வென்றர். நீண்ட நாள் வாழ்ந்தார்.

மதுரையை ஆண்டு வந்த பாண்டிய மன்னன், கரூராரர்மேல் பற்றும், பாசமும் கொண்டிருந்தான். கரூராரை நல்ல முறையில் ஆதரித்து வந்தான்.

பாண்டியனுக்கு நீண்ட நாட்களாக ஒரு ஆசை, எண்ணம்! தன்னுடைய தேவாலயத்தில் ஒரு நல்ல நடராஜர் சிலை செய்து வைக்க வேண்டுமென்ற ஆசை! அந்தச் சிலையை கருவூரார்தான் செய்ய வேண்டுமென்று விரும்பினர்!

ஆணை பிறந்தது பாண்டியனிடமிருந்து சிலைவடிக்கச்சொல்லி கருராருக்கு. கருரார் பாண்டியன் எண்ணப்படி சிலையை சிறந்த முறையில் உருவாக்கினர்.

ஒரு நல்ல நாளில் பாண்டியன் தேவாலயத்தில் நடராஜர் சிலை நிர்மாணிக்கப்பட்டது. அதுமட்டுமல்ல,

சிதம்பரம் தேவாலயத்தை முதலில் கட்டுவதற்குக் கட்டட வரைப்படம் கருவூரார்தான் போட்டுக் கொடுத்ததாக சரித்திரம் கூறுகிறது.

கருவூரார் முன்னூறு ஆண்டு உயிர் வாழ்ந்தார் என சரித்திரம் செப்புகிறது.

கருவூரில் பசுபதீஸ்வரர் ஆலயத்திற்கு தென்மேற்கு மூலையில் யோகாஸ்ரமம் ஏற்படுத்தினர் கருவூரார்!

அந்த ஆசிரமத்தில் சமாதி நிலையில் இருந்துகொண்டு யோகம் செய்து வந்தார் அவரிடம் பல மாணவர்கள் யோகாசனம் கற்று வந்தார்கள்!

புழுங்கலரிசியைக் கோவையிலைச் சாற்றில் மூன்று தரம் ஊரவைத்து உலர்த்தி நல்லெண்ணெயிற் பிசறி வாயிலொதுக்கிக் கொள்ளப் பல்லீறில் சீழ் இரத்தம் காணுதல் நீங்கும்.

கொஞ்ச நாட்களில் கருவூராருக்கு ஒரு எண்ணம் தோன்றியது. எப்போதும் நிரந்தரமான சமாதி நிலையை அடைய எண்ணினர் அதன்படி யோகாஸ்ரமத்திலேயே ஒரு நிலவரையை உண்டாக்கி அதில் இறங்கி சிவயோக சமாதி நிலை அடைந்தார். அதன் மூலம் கருவூரார் பேரின்பம் கண்டதாக வரலாறு!

காயகல்பமுண்டு பிணி, மூப்பு இவைகளை வென்றவராகையாலும், சிவயோக சித்து படைத்தவராகையாலும், சமாதியில் பேரின்பத்தில் ஆழ்ந்திருப்பார் என்பது நம்பிக்கை

கருவூராரைப்பற்றி போகர் ஒரு இடத்தில் குறிப்பிடும்போது 'சின்மயத்தில் பேரின்பம் கண்ட சித்து' எனப் புகழ்கிருர்,

நாளடைவில் கருவூரார் சமாதியின்மேல் கோவில் கட்டப்பட்டது. தினசரி பூஜை நடத்தப்பட்டு வந்தது, வருகிறது. (இன்றளவும்)

கருவூரில் பள்ளியில் பயிலும் மாணவர்களில் சிலர், இன்னமும் தேர்வு எழுதப்போகும் சமயங்களில் கருவூரார் கோவில் வலம் வந்து, கும்பிட்டுவிட்டு தேர்வு எழுதப் போவார்கள்!

கருவூர் பண்டையப் பெருமை வாய்ந்த நகரம், அத்துடன் மட்டுமல்ல, கருவூரார் வாழ்ந்த நகரம் என்பதில் தனி மதிப்பு உண்டு!

கருவூர் சரித்திரத்தில் நின்று நிலைத்து, வாழ்ந்து வருபவர் கருவூரார்! அவருக்குகென்று ஒரு பெருமை உண்டு. அந்த பெருமை கருவூருக்கு உண்டு! ஏனென்றால் கருவூரார் பிறந்த மண் அதனால் தான். கருவூரார் பதினெண் சித்தர்களில் ஒருவர் ஆவர், என்பதை குறிப்பிட தக்கதாகும். (முற்றும்.)

---

# இஞ்சி லேகியம்.

ஒரு படி ஆவின் நெய்யில் முப்பது பலம் சீனியைக் கலந்து காய்ச்சிக் கரைந்த பின்பு இறக்கி அதில் மேல் தோல் நீங்கிய பத்துப் பல இஞ்சியை எலுமிச்சம் பழசாற்றால் மழமழ என்று அரைத்துலர்த்தின சூரணத்தையும் அரிந்து உப்புக்கலந்து மோரிற் போட்டு ஊற வைத்து உலர்த்தின பிரண்டை, உலர்ந்த கரிப்பான் பூவரசம் பட்டை, வகைக்கு ஒரு பலம் வாலுளுவையரிசி, தாளீசபத்திரி, கடுகு, மல்லி, சித்திர மூலம், கற்கடகசிங்கி, குரோசானி ஓமம் மிளகு சீரகம் ஏலம், திப்பிலி, அதிமதுரம், கோஷ்டம், திப்பலிமூலம், வகைக்கு ½ பலம் வீதம் இவைகளை இடித்து வடிகட்டின சூரணத்தையும் தூவிக்கிண்டி, வேளையொன்றிற்குக் கொட்டை பாக்குப் பிரமாணம் சாப்பிட்டுவர பித்தவாயு, உஷ்ணம், சத்திகுன்மம் அரோசகம், விக்கல், அஸ்திஜுரம், ஜன்னி, அஜீரணவாயு, உப்பிசம் முதலியவைகள் குணமாகும். (வை. சா)

உ

# தலைகீழ் பரிசோதனை!

உடு என்ற சொல்லின் உட்பொருளே இந்த உடம்பு! உடம்பு ஓர் சட்டைக்கு சமானம் உடுப்பது உடை, தடுப்பது தடை, கொடுப்பது கொடை. ஆண்டவன் அருளால் உண்டாகிய இந்த உடம்புக்கும், அதனுள் ஜீவாத்மாவாக பரிணமித்து உயிர்வாழ்வதற்கும், நோய்நொடிவராமல் இருக்கவும், தாவர இனங்களாகிய மூலிகைகள் உணவாக பயன் படுத்தப்படுகிறது. உடல்நிலைக்கு ஏற்றவாறு நோய் தடுப்பு முறையாக இன்னின்ன உணவுகளில் இவ்வகையான சத்துக்கள் இருக்கிறது, இதை எந்தெந்த நேரங்களில் உட்கொள்ள வேண்டும் எப்படி உட்கொள்ள வேண்டும் என்பதைத்தான் நமது நாட்டு மருத்துவம் போதிக்கின்றன. அதாவது காய்கறி, கீரை வகைகளை பரிசோதனை செய்து கொள்வன கொண்டு தள்ளுவன விலக்க வேண்டும் என்பதாம்.

ஆனால் நவீன மேனாட்டு வைத்தியம் என்ன சொல்லுகிறது? எதற்கு முக்கியத்துவம் அளிக்கிறது? என்றால் மனிதன் உட்கொள்ளும் உணவு வகைகளை பரிசோதனை செய்வதைவிட்டு அவன் உண்டு பின் கழிக்கும் கழிபொருள்களான மலம், மூத்திரம், உமிழ்நீர், ரத்தம் சுக்கிலம் ஆகியவைகளை எடுத்து எதில் என்ன சத்துக்கள் இருக்கின்றன என்று நவீன கருவி கரணங்கள் உதவியால் பார்த்து.........ஹோ......... கண்டுபிடித்து விட்டேன் உனக்கு...டயாபிடீஸ்...ஹோ.........உனக்கு... டீபி! என்று பெயர் வைத்துவிடுகின்றனர். இவர்கள் அசத்து கழிவு பொருள்களை பரிசோதனை செய்து, வந்த நோய்களை கண்டு பிடித்து பய முறுத்துகிறார்களே தவிர நோய் தடுப்பு முனைறக்கான கொள்கை எங்கே? நவீன வைத்தியம் எல்லாம் தலைகீழ் பரிசோதனைகள் பாடங்கள் தானே?

---

## சுக்கு லேகியம்.

நூறு பலம் சுக்கைச் சிதைத்து தூணி நீரிற் போட்டு எட்டொன்றாக வற்றவைத்து வடித்த கஷாயத்தில் பத்து பலம் பனை வெல்லத்தைக் கரைத்து பாகு செய்து ஓமச் சூரணம், கருவேப்பிலைச் சூரணம் வகைக்குப் படி வீதம் தூவி அரைப்படி நெய் விட்டுக்கிண்டி வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு கொட்டைப்பாக்கு பிரமாணம் சாப்பிட்டுவர கிராணி மூலம் தசைவாயு, அதிசாரம் கடுப்பு இரத்தம் பாரிச வாயு, வீக்கம், சூலை பொருமல் மந்தம், செரியாமை, புளியேப்பம் ஆகியவைகள் குணமாகும்.

(அ. நவநீதம்)

# இதய ஒலி!

19—11—65 சேலம்-6.

ஸ்ரீ கந்தசாமி, பி. எ. எல். டி.

காரியதரிசி, மாவட்ட நூலகக் குழு அதிகாரி, குகை சேலம்-6.

பொருள்:-65 கிளை நூல் நிலையங்களுக்கு மூலிகை மணி பத்திரிகைகயை அனுப்பவேண்டி''

ஐயா, அன்புகூர்ந்து தங்கள் மூலிகை மணி மாதப் பத்திரிகையை, இத்துடன் இணைத்துள்ள 65 கிளை நூல் நிலையங்களுக்கு 1-12-65 முதல் 30-11-66 முடிய ஒரு ஆண்டுக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம். 65 கிளை நூல் நிலையங்களின் முகவரிகள் அனுப்பியுள்ளது. மேலும் மொத்த தொகைப் பட்டியலை அனுப்ப வேண்டுகிறோம். அன்புள்ள,

கே. ரமணன்,
காரியதரிசிக்காக

---

16—11—65.

ஐயா, உங்களிடம் மூலிகை ரக்ஷை வாங்கி கட்டினேன். முருகன் அருளால் எனக்கு பல நன்மைகள் உண்டாயின. முக்கியமாக இந்த ரக்ஷை வருவதற்கு முன்பு குதிரை வண்டியில் பிரயாணம் செய்து விபத்து ஏற்பட்டதன் விளைவாக எனக்கு புத்தி பேதலித்து மாருட்டம் அடைந்து இருந்தது. ரக்ஷை அணிந்த பிறகு இந்த மாருட்டம் யாவும் போயிற்று. மன அமைதியுடனும் சந்தோஷமுடனும் இருக்கிறேன்,

கம்பம், இப்படிக்கு,
கதர் விற்பனை நிலையம். வி. முனியாண்டி,

---

14—11—65 அருப்புக்கோட்டை.

அன்புக்கொரு ஐயா,

மூலிகை மணி புஸ்தகம் மாதா மாதம் 15ந் தேதி நான் பெற்றுக் கொள்ளுகிறேன். மூலிகை மணியில் உள்ள விஷயங்களை நான் படித்துப் சந்தோஷப்படுகிறேன். நம் நாட்டு மூலிகைகள் முதல் பாகம் புத்தகம் ரொம்பவும் தெளிவாகவும் நல்ல முறையில் வெளியீடு செய்திருக்கிறீர்கள் புத்தகத்தை படித்து நோய்க்கு தக்கமுறையில் மூலிகைகளை கொண்டு

வந்து சிகிட்சை செய்து பார்த்தோம்- பிறருக்கும் சொன்னேன். குணம் கிடைத்தது. யாரோ சிலர் தங்கள் பெயரை சொல்லி பணம் பறிப்பதை பேப்பரில் பார்த்தேன். ரொம்பவும் வருந்துகிறேன், நல்ல காரியங்களில் தான் இந்தமாதிரி முட்டுக்கட்டைகள் கெடுதல் செய்வார்கள். இது கடவுளின் சோதனை அதற்காக தங்களுடைய இந்த நற்பணியை யாரும் கெடுதல் செய்ய முடியாது நீங்கள் கடவுள் அருளால் பல்லாண்டு சுகமாய் இருக்கவேணுமாய் கடவுளை வேண்டுகிறேன். வேணும் சுபம்.

எஸ். சுந்தரராஜன்,
வார்டு நெ. 16-9-11, தெற்குத் தெரு.

12—11—65 ஆற்காடு. (வ. ஆ. மா.)

தாங்கள் தமிழ் நாட்டிற்காக தேவதூத முனிவர்போல் வந்து உதித்தற்கு ஈஸ்வரரை அனுதினம் பிரார்த்திக்கிறேன். நான் அருட்பெரும் ஜோதியான ஈஸ்வரரின் நாமத்தை ஜபித்தும் வேதங்களை ஆராய்ந்து ஆண்டவன் பாதத்தில் சேர முயற்சிக்கும் நேரத்தில், தங்கள் பத்திரிகையில் தெய்வ சக்தியின் மகிமைகளையும் மூலிகைகளின் மகிமைகளையும் பொது மக்களுக்கு தெரிய செய்யும் முயற்சியை மேலும் மேலும் வளர்ச்சியடைய ஆண்டவனை பிரார்த்திக்கிறேன்,

எ. பி. வேணுகோபால்,
ஜவுளி வியாபாரம்.

9—11—65. துடியலூர், கோவை-11.

நான் பெருந்துறை ஆஸ்பத்திரியில் 10 மாதம் வைத்தியம் பார்த்தேன் சரியானபடி குணம் இல்லை. வீட்டில் 3 மாதம் மாத்திரையும் ஊசியும் போட்டுக்கொண்டு இருந்தேன், பிறகு நம் நாட்டு மூலிகையில் வெளிவந்த இரு குரங்கின்கை மூலிகையின்படி நான் உபயோகித்து வருகிறேன். சுமார் $1\frac{1}{2}$ வருஷமாக அதை சாப்பிட்டு வருகின்றேன். அது நல்ல பலன் தருகிறது. மழை, பனி, இவைகளால் எந்த விதமான தொந்தரவுகளும் இல்லை. நான் வேலையும் செய்து கொண்டு இருக்கிறேன். உடம்பு குணமாகத்தான் இருக்கிறது. எப்பவும் 2 வேளை மருந்து, மொசு மொசுக்கை இலை சூர்ணம் சேர்த்து வந்தால் டி. பி. வியாதி குணம் அடையும் இது என் கண் கண்ட மருந்து நான் தங்களை கடவுளாக பாவிக்கிறேன். இரு குரங்கின்கை எனக்கு புத்துயிர் கொடுத்துள்ளது. எனக்கு நம் நாட்டு மூலிகைகள் புத்தகமும் ஒன்று அனுப்பவும்.

இப்படிக்கு,
டி. ஆர். குமாரசாமி.

# நவக்கோள்களின் முன்னறிக்கை

சோதிட வித்வான். எம். எஸ். வைத்தியலிங்கம்.
விசுவாவசுஹூ மார்கழிமீ
(16—12—65 முதல் 13—1—66 வரையில்)

மேஷம்- உடல் ஆரோக்கியம், தேவையான நிதி நிலைமை, வசதி வாய்ப்புக்கள் பெருகிடும், பிரியமான உணவு வகைகள் நேரத்தில் உண்ணவும் கிடைக்கும். பழைய கடன் வசூலாகலாம், புத்திர களத்திர சௌக்கியமும், சிலருக்கு வெளியூர் பிரயாணங்களும் ஏற்படும். இந்த நாட்களில் புதிய தொழிலில், செல்வந்தர்கள் நட்பில் ஈடுபடுவது நற்பலனளிக்கும்,

ரிஷபம்- வீண் அலைச்சல், நோய்களால் செலவு, முயற்சியில் தோல்வி, நண்பர்கள் விரோதம், வேளை தவறிய உணவு, அதனுல் நோய் அதிகமாதல் ஆகியன பொது சம்பவங்கள். ஒரு சிலருக்கு அரசியல் விவகாரங்களில் அவமதிப்பு, கால விரையம் உண்டாகலாம், சிலருக்கு பூமி வாகனம் ஆகியவைகளின் விக்கிரையத்தால் நஷ்டம் ஏற்படக் கூடும். எச்சரிக்கை பயன் அளிக்கும்.

மிதுனம்- மாத ஆரம்பத்தில் நற்பலன்களைக் காணலாம். பிறகு வர வர நிலைமாறி தொழிலில் ஏமாற்றம், குடும்பக்கவலை, எதிர்பார்த்த இனங்களில் தாமதம், வீண் சண்டைகள் ஆகியவைகளைச் சமாளிக்க வேண்டிவரும். இம்மாதத்தில் அத்தியர்வசியமான பிரயாணங்கள் தவிர மற்றவைகளை தள்ளிப்போடுவது நன்மை தரும்.

(அடுத்தப் பக்கம் பார்க்க)

---

20—11—65. தஞ்சை ஜில்லா.

அன்புள்ள டாக்டர் ஐயா, அவர்கட்கு வந்தனம் தாங்கள் பல ஆண்டுகாலமாக தினமணி சுடரில் நம் நாட்டு மூலிகைகள் என்று எழுதி வந்த கட்டுரைகளை விடாமல் வாசித்து வந்தோம். என் மகன் வெங்கடேசனுக்கு திருமணமாகி 12 ஆண்டுகளாகியும் குழந்தையில்லாது கவலையாக இருந்து 1963ல் தங்கள் மேல்படி கட்டுரையில் மாதுளையைப் பற்றி எழுதிய 'புத்திரபாக்கிய மருந்து' ஒருமுறை எழுதியிருந்தீர்கள். அதன்படி மாதுளை மரத்தின் சமூலத்தை நீங்கள் எழுதிய பிரகாரம் செய்து தற்போது எனது மகனுக்கு $1\frac{1}{2}$ வயது பேரன் வீட்டில் விளையாடுகிருன் என்பதைத்தங்களுக்கு பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன் எம்பெருமான் திருவருளால் தங்களுக்கு சகல நன்மைகளும் உண்டாக பிரார்த்தனை செய்கிறோம், வந்தனம். இங்கனம்,

வைதீஸ்வரன் கோயில் போஸ்ட், டி. சாரங்கபாணி ஐயங்கார்,
தஞ்சை ஜில்லா. ரயில்வே ஸ்டேஷன் ரோட்.

கடகம்- எல்லாவித அலுவல்களிலும்வெற்றி, நண்பர்களால் உதவி பிரமுகர்கள் சந்திப்பில் மனமகிழ்ச்சி, தெய்வ சிந்தனை, அமைதி கிடைக்கும் என்ருலும் பிற்பகுதியில் எதிர்பாராத வகையில் பணச் செலவு ஏற்படும்.

சிம்மம்- குரு பகவான் உயர்ந்து நிற்கின்ருர். வியாபார விருத்தி, மேலதிகாரிகளின் ஆதரவு விவசாயிகளுக்கு தானியம் நற்பலனளிக்கும். அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு நல்ல செல்வாக்கு உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் திருப்திகரமான போக்கு, ஆகியன உண்டாகும். சிலருக்கு சகாக்களால் தூஷனை, வீண் கலகம், பொருமை, ஆகியவைகள் ஏற்பட்டாலும் இவர்களை ஒன்றும் செய்யாது.

கன்னி- குடியிருப்பு மாற்றம், தொழில் மாற்றம். நடை பெறுவது முக்கிய அம்சமாகும். அரசாங்க பதவியில் உள்ளோர்க்கு அதிருப்தி! பிரயாண செலவு, அலைச்சல், வியாபாரிகளுக்கு அந்தரங்கமான பீதி, விவசாயிகளுக்கு பலன் குறையும். கடன் மிகுதியாகும். பொதுவாக இம்மாதம் நல்லவை அல்லவை கலந்தே காணும்.

துலாம்: எதிர்பாராதவிதமான வெற்றிகள், சிலருக்குமட்டும் உண்டாகும். மற்றவருக்கு கடன் தொல்லை, நோய்கள் மறைமுகமான எதிர்ப்பு மனக்கவலை ஆகியன பொது நிகழ்ச்சிகள், விசேஷமாக வியாபாரிகளுக்கு பணவசதி, நல்லவர்கள் நட்பு, சரீர சவுக்கியம் ஆகியவை உண்டாகும்.

விருச்சிகம் : சனி பகவானுல் சவுக்கியம் குறையும் குரு தேவரால் பணமுடக்கம் வியாபாரம், தொழில் முதலியவற்றில் மந்தம் ஏற்படும். புதிய முயற்சிகளில் அனுகூலம், கிரய விக்கிரயங்களில் லாபம் கடித போக்குவரத்தில் நன்மை ஆகியவைகள் பொது நிகழ்ச்சிகளாகும்.

தனுர்: சமாளிக்க முடியாத செலவினங்கள், பிரயாணங்கள், குடும்பத்தில் சரீர பீடை, வீண் கலக வார்த்தைகள், இவைகள் பொது நிகழ்ச்சி, ஒரு சிலருக்கு மட்டும் மனநிம்மதி வருவாய்க்கேற்ற செலவு, பிறர் சகாயமும் உண்டாகலாம்.

மகரம் : ஏதோ ஒரு வகையில் கவலை, துஷ்டர்களை நேசித்தால் துன்பம், தொழில் வெறுப்பு, கடிதபோக்குவரத்தில் ஏமாற்றம், பெரிய இடத்தில் பகை, பிரயாண தடை, ஆகியவை பொது நிகழ்ச்சிகள் நல்ல தசாபுத்திகள் நடப்பவர்களுக்கு மட்டும் ஒரு சில நற்பயன்கள் பலிதங்கள் ஏற்படும் தெய்வசிந்தனை தீச்செயல்களை குறைக்கலாம்.

கும்பம் : சனி பகவானுல் கெடுதல் பலன்கள்தான் நிகழும் எதிலும் ஏமாற்றம், அதிருப்தி, நியாயமற்ற செலவு அலைச்சல், மதிப்பற்றவர்கள் நட்பு. ருசியற்ற உணவு, சுகமற்ற படுக்கை சாரமற்ற பேச்சு லாபமற்ற எண்ணங்கள் ஆகியவைகள் பொது நிகழ்ச்சிகள். சனி பகவானுக்கு ப்ரீதி செய்ய இவை சற்று நிவர்த்தியாகும்.

மீனம் : நல்லவையும் தீயவையும் கலந்தே நிகழும். நண்பர்களால் உதவி செய் தொழிலில் மத்திய லாபம், முயற்சிகள் தாமத பலிதம், ஆகியவைகள் பொது நிகழ்ச்சிகள், விசேஷமாக சிலருக்கு, லேவாதேவியில் மிகுந்த ஏமாற்றமும், மன சங்கடமும் உண்டாகும். எச்சரிக்கை நன்மை தரும். சுபம்.

---

மூலிகை மணீ அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவரும், ஆசிரியரும்
ஆ. இரா. கண்ணப்பர், 33-1, தென்னமரம் தெரு, வேலூர். (வ. ஆ)